159

THE "VAKIL"—TAMIL LAW MONTHLY FOR THE PUBLIC

"வக்கீல்"

159 3-6

பொது மக்களுக்குத் தேவையான
[illegible]களையும் கண்ட்ரோல் முதலிய
விதிகளையும் உடனுக்குடன்
விமர்சனங்களுடன்
விளக்கும்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
14 JUL 1949
MADRAS

தமிழ் மாதப் பத்திரிகை

ஜூலை 1949

1-4

இந்த இதழில்

புதிய வரிகள்
ஜமீன் இனம் ஒழிப்பு சட்டம்
ஷாப் சட்டம்
விற்பனை வரி விமர்சனம்
கண்ட்ரோல்-ரேஷன்
லைசென்சு-விலை-நிர்ணயம்
ஏற்றுமதி இறக்குமதி
சர்க்கார் அறிக்கைகள்
விபரங்கள் உள்ளே பார்க்கவும்

1766

தபால் பெட்டி நெ. 26. கும்பகோணம்.

தனிப்பிரதி அணா 4
வருட சந்தா ரூ 3

E W I போனிக்ஸ் பங்காக்கள் வருஷக்கணக்கில் உபத்திரவமின்றி உழைக்க உத்திரவாதமுள்ளவை. கோடைக்காலத்தை சுகமாகவும் குளிமையாகவும் கழிக்க பிரபலமான போனிக்ஸ் பங்காக்களை விட சிறந்தது வேறுகிடையாது

1949 MODEL

EWI LTD. SYMBOL OF QUALITY

PHŒNIX GOVT. TESTED *fans* AC/DC

FAS-446

Sole Distributors for Madras Presidency inclusive of all States:

R M. S. & CO. LTD., 16, BROADWAY, MADRAS-1.

கோயமுத்தூர் ஜில்லாவுக்கு விநியோகஸ்தர்கள் : மெஸ்ஸர்ஸ் ஷண்முகம் & கோ., 5/106, ஜெயில் ரோடு, கோயமுத்தூர்.	தென் & வட ஆற்காடு ஜில்லாவுக்கு விநியோகஸ்தர்கள் : மெஸ்ஸர்ஸ் குட்மேன் & கோ., டூப்ளே தெரு, புதுச்சேரி.
திருவாங்கூர் கொச்சி சமஸ்தானங்களுக்கு சப்-டிஸ்ட்ரிபியூட்டர்கள் : M/s. ஸௌத் இந்தியா ஸேல்ஸ் கார்பொரேஷன் கல்லன் ரோட், ஆலப்புழை.	தஞ்சாவூர் ஜில்லாவுக்கு சப்-டிஸ்ட்ரிபியூட்டர்கள் : M/s. செல்வா எலக்ட்ரிக் ஸ்டோர்ஸ் பெரிய கடைத்தெரு, கும்பகோணம்.

OFFICE OF THE REGISTRAR OF ... MADR... 14 JUL 1949

"வக்கீல்"

பொதுமக்களுக்கான உயர்தர
மாத சட்ட வெளியீடு

ஆசிரியர் கமிட்டி

ஸ்ரீ V. தியாகராஜன், B. A., B. L.,
,, A. பாரத்தசாரதி நாயுடு, B. A., B. L.,
,, S. சாம்பசிவய்யர், B. A., B. L.,
,, T. S. வெங்கடராமன், B. A., B. L.,
,, R. கோபாலசாமி, B. A., B. L.,
,, R. கிருஷ்ணமூர்த்தி, B. A., B. L.,
,, V. S. விஜயருகவாச்சாரி, B. A., B. L.,

"வக்கீல்"

(சந்தா விபரம்)

வருட சந்தா	... ... ரூ.	3—0—0
தனிப் பிரதி (வெளிவரும் மாதத்தில்)	...	0—4—0
முந்திய மாதப் பிரதி	...	0—6—0
வெளி நாடு வருட சந்தா	...	6—0—0

"வக்கீல்" காரியாலயம்
தபால்பெட்டி நெ. 26 :: கும்பகோணம்

"வக்கீல்"

::

பொது மக்களுக்கான சட்ட
விஷயங்களை விளக்கும் மாதப் பத்திரிகை

மலர் 1 ஜூலை '49 இதழ் 4

பொருள் அடக்கம்

புதிய வரிகள்	3
ஜமீன் இனும் ஒழிப்புச் சட்டம்	5
ஷாப் சட்டம் (தொடர்ச்சி)	11
விற்பனை வரி (தொடர்ச்சி)	16
கண்ட்ரோல்-லைசென்ஸ்-ரேஷன் விலை நிர்ணயம்-இதர சர்க்கார் அறிக்கைகள்	21

சந்தாதாரர்கள் கவனிக்கவும்

வருட சந்தாதாரர்களாகச் சேருபவர்களுக்கு வருட சந்தா அனுப்பும் மாதத்திலிருந்து 12 இதழ்கள் அனுப்பப்படும், முந்திய மாத இதழ்கள் தேவையானல் பிரதி 1-க்கு அணு 6 வீதம் சேர்த்து அனுப்ப வேண்டும்.

"வக்கீல்" பத்திரிகை 1949 ஞ ஏப்ரல் மாதம் ஆரம்பிக்கப்பட்டது. ஏப்ரல், மே, ஜூன் இதழ்கள் முழுவதும் செலவாகி விட்டபடியாலும் பல நேயர்கள் வற்புறுத்துவதின் பேரில் அவைகளை மறுபடியும் அச்சடிக்க ஏற்பாடு செய்கிறோம். முந்திய இதழ்கள் தேவையுள்ள நேயர்கள் 15—7—1949-க்குள் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

N. கோபால்தாஸ் & கோ.,

வைரம், தங்க நகைகள், வெள்ளிப்பாத்திரங்கள்

சின்னகடைத்தெரு,
திருச்சி.



நெ. 121, பெரியதெரு,
கும்பகோணம்.

நல்ல சாமான்கள் !

நியாயமான விலை!!

- வைரங்களில் பழைய வெட்டுமுதல் புது வெட்டுவரையில் எல்லா ரகங்களும் ஒவ்வொருவருடைய விருப்பத்திற்கேற்றவாறு கிடைக்கும்.
- ஒவ்வொரு வைர நகை வேலைப்பாடுகளும் கிராக்கிகளுக்கு பூரண திருப்தி அளிக்குமாறு எங்கள் நேர்பார்வையிலேயே தயாரிக்கப்படுகின்றன. இத்துடன்கூட கிராக்கிகளின் ஆர்டரின்பேரில் தங்க நகைகளும் செய்துகொடுக்கிறோம்.
- சீமைக் கட்டி வெள்ளியில் செய்யப்பட்ட வெள்ளிப் பாத்திரங்கள் எல்லா மாதிரிகளிலும் எப்போதும் தயாராக இருக்கின்றன. கிராக்கிகளின் ஆர்டர்பேரிலும் வெள்ளிப் பாத்திரங்கள் செய்துகொடுக்கிறோம்.

தங்கள் மேலான ஆதரவை எப்போதும் கோருகிறோம்.

தமிழ்நாடு அரசு ... நூலகம்
சென்னை-600 008
18768?

கல்யாண

பட்டு நூல்

ஜவுளிகளுக்கு

ராதா ஸில்க் எம்போரியம்

119, பெரியதெரு :: கும்பகோணம்.

போன் நெ. 83

Tel. "ROYAL"

உயர்ந்த பிளேசர் பட்டு உத்திரவாதமுள்ள ஜரிகை, பலரக கலர்கள்-உடை நயம் நாகரீக பல பார்டர் தினுசுகள் 6, 7, 8, 9, கெஜங்களில் ஸ்டாக் செய்திருக்கிறோம்.

ஒரே விலை விற்பனை

K. T. A. K. L.

பாலகிருஷ்ணையர்

பட்டு ஜவுளி வியாபாரம்

8, சௌராஷ்டிர பெரியதெரு,
கும்பகோணம்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
14 JUL 1949
MADRAS

வக்கீல்

வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!

மலர் 1 ஜூலை 1949 இதழ் 4

புதிய வரிகள்

புதிதாய் எந்த வரி விதிப்பதாய் எந்த சர்க்கார் உத்தேசித்தாலும் அந்த வரியின் பளுவைச் சுமக்க வேண்டியவர்கள் முதலில் ஆட்சேபணை செய்வது இயற்கையே. ஆனால் வரியின் பளுவுக்கும் அதைப் பொருத்து கிளம்பும் ஆட்சேபணைகளுக்கும் எவ்வித சம்பந்தமும் இருப்பதாகத் தெரியவில்லை. ஆட்சேபணைகளின் வேகம் புதிய வரிகளால் இனி பாதிக்கக் கூடியவர்களின் செல்வாக்கைப் பொருத்ததாகவே தோன்றுகிறது. அதற்குத் தகுந்த உதாரணம் சமீபத்தில் சென்னை சர்க்கார் தங்கள் வரவு செலவு திட்டத்தில் துண்டு விழும் தொகையை ஈடு செய்ய அவர்கள் உத்தேசித்த வரிகளும் அதனால் கிளம்பி இருக்கும் ஆட்சேபணைகளுமே. வரி போடாமல் எந்த சர்க்காரும் பொது ஜனங்களுக்கு அவசியமான திட்டங்களை நிறைவேற்ற முடியாது. ஆனால் வரி போடும் விஷயத்தில் ஒரு நியாயமான முறையை அனுஷ்டிக்கலாம். அதாவது எந்த வரியும் உழைத்து வயிற்றுக்குப் போதுமளவு சம்பாதித்து வரும் ஏழை மக்களின் வாழ்க்கைக்கு வேண்டிய அத்தியாவசியமான சாமான்களின் விலையை உயர்த்துவதாக இருக்கக்கூடாது. அதிகமாய் எவ்வித உழைப்பும் கஷ்டமுமின்றி தானாகப்பணம் குவியும் இடங்களிலிருந்து சர்க்காருக்குத் தேவையான வரிகளை எடுத்துக்கொள்வதே நியாயம். இந்த நியாயத்தை வைத்துக் கொண்டு பார்த்தால் சென்னை சர்க்கார் வரி மசோதாக்களில் அதிக ஆட்சேபணைகளுக்கு இடமில்லை. கொஞ்சம் ஆட்சேபணை உள்ள விஷயங்களிலும் பொறுக்குக் கமிட்டியாரும் சட்ட சபையாரும் அவைகளை நிவர்த்தி செய்தே இருக்கின்றனர். மிளகாய் வற்றல், மிளகு, மஞ்சள், போன்ற சாமான்களுக்கு விற்பனை வரி உயர்த்த உத்தேசித்திருந்தது கைவிடப்பட்டது பொதுமக்களால் பாராட்டத்தக்கதே. வரி மசோதாக்களின் விபரம்:

சினிமாக் காட்சி வரி:— சென்னை 1939-ஆம் வருடத்திய தாமாஷா வரிச் சட்டத்தில் ஒரு புது வரி சேர்க்கப்பட்டிருக்கிறது. அதாவது சென்னை நகரில் நடக்கும் ஒவ்வொரு சினிமா காட்சிக்கும் ரூ 2—8—0; பெரிய முனிசிபாலிடிகளில் ரூ 2—0—0; மற்ற முனிசிபாலிடிகளில் ரூ 1—8—0; மற்ற இடங்களில் ரூ 1—0—0 வீதம் வரி வசூலிக்கப்படும். டூரிங் சினிமாவாக இருந்தால் ஜனத்தொகை 10,000-க்கு குறைந்த கிராமப்பிரதேசங்களில் நடக்கும் காட்சிக்கு வரி கிடையாது.

விற்பனை வரிச் சட்டம் திருத்தம்: (1) இதுவரை விற்பனை வரி இல்லாமல் இருந்ததை திருத்தி பருத்தி விற்பனையில் ஒரு கட்டத்தில் மட்டும் ரூபாய் 1-க்கு 1 தம்படி வரி கொடுக்க வேண்டுமென்று சேர்க்கப்பட்டிருக்கிறது. (2) உற்பத்தியாளரைத் தவிர மற்றவர் ஏற்றுமதி செய்யும் தேயிலைக்கு ரூபாய் 1-க்கு காலணா இப்பொழுது வரி விதிக்கப்பட்டிருக்கிறது. (3) இதுவரை

மற்ற எல்லா வியாபாரிகளைப் போல் ஹோட்டல் காரர்களும் மொத்த வியாபாரத்தில் ரூ 1-க்கு காலணு விற்பனை வரி கொடுத்து வருகிறார்கள். இத்திருத்தச் சட்டப்படி வருடாந்தர மொத்த விற்பனைத் தொகை ரூ 25,000-க்கு மேற்பட்டிருக்கும் ஹோட்டல்கள் ரூ 1-க்கு 4½ தம்படி விதம் விற்பனை வரி கொடுக்கவேண்டும். மற்ற விற்பனை வரி உள்ள ஹோட்டல்களுக்கு முன் போல் ரூ 1-க்கு 3 தம்படிதான் வரி. மிளகாய் வற்றல் முதலிய மற்ற சாமான்களுக்கு வரி உயர்த்தப்படவில்லை.

மோட்டார் வரி: மோட்டார் கார்கள், லாரி பஸ் முதலியவைகளின் மீதுள்ள வரியை உயர்த்தக் கொண்டு வரப்பட்டிருக்கும் மசோதா பொறுக்குக் கமிட்டியால் பரிசீலனை செய்யப்பட்டு சென்னை அசெம்பிளியில் நிறைவேற்றப் பட்டுவிட்டது.

விளம்பர வரி மசோதா: இன்னும் சட்ட சபையால் நிறைவேற்றப் படவில்லை. பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்பப்படலாம். இம்மசோதாப்படி பத்திரிகைளில் பிரசுரமாகும் விளம்பரங்களுக்கும், விளம்பர ஏஜண்டுகள் மூலம் பிரசுரமாகும் விளம்பரங்களுக்கும் விளம்பரக் கட்டணத்தில் 10 சத விகிதம் வரியாக வசூலிக்கப்படும். இதர விளம்பரங்கள் விஷயத்தில், விளம்பரச் செலவில் 10 சத விகிதம் வரியாக வசூலிக்கப்படும். பத்திரிகை பிரசுர கர்த்தர்களும், விளம்பர ஏஜண்டுகளும் லைசென்சு வாங்கிக் கொள்ளவேண்டும். மற்றவர்கள் பர்மிட் வாங்கிக் கொள்ள வேண்டும். இன்னும் இவ்வரியை வசூல் செய்யவும் சட்டத்தை மீறுவோருக்கு தண்டனையும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

மத்ய சர்க்கார் "எஸ்டேட்" வரி மசோதா: "எஸ்டேட் வரி" என்பது நமது நாட்டிற்கு புதிது. இந்த வரி ஐரோப்பிய நாடுகளில் பல வருடங்களாக வசூல் செய்யப்பட்டு வருகின்றது. இந்தியாவில் "எஸ்டேட் வரி" வசூல் செய்ய மத்ய சர்க்கார் ஒரு மசோதா தயாரித்து டில்லி பார்லிமெண்ட்டில் சமர்ப்பிக்கப்பட்டு, பார்லிமெண்டாரால் ஒரு பொறுக்கு கமிட்டியின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டது. இந்தப் பொறுக்கு கமிட்டியார் இந்த மசோதாவை பரிசீலனை செய்து சில இடங்களில் திருத்தி அவர்களுடைய ரிபோர்ட்டை 31—3—49-ல் பார்லிமெண்டுக்கு அனுப்பி இருக்கிறார்கள் (இது சென்னை சர்க்கார் கெஜட் 24—5—49-ல் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிறது). "எஸ்டேட் வரி" என்பது இறந்து போனவருடைய சொத்தின் பேரில் சர்க்காருக்குக் கொடுக்க வேண்டிய வரி. இறந்தவருடைய சொத்தை அடைகிறவர்கள் கொடுக்க வேண்டியது. விவசாயம் செய்யக்கூடிய நிலங்களை நீக்கி மற்ற சொத்தின் மதிப்பின் பேரில் வரி விதிக்கப்படும். சொத்து ஜாஸ்தி ஆக ஆக வரி விகிதமும் (இன்கம் டாக்ஸ் போல்) அதிகரிக்கும். இறந்து போனவர் இறப்பதற்கு இரண்டு வருடத்திற்குள் தானசாசனம், இனும், செட்டில்மெண்ட், டிரஸ்டு பத்திரம் இவை மூலம் உயிருடன் இருக்கும் போதே தன் சொத்துக்களைக் கொடுத்திருந்தாலும் இந்த வரி உண்டு. இறந்து போக 6-மாதத்திற்குள் பொது தர்மங்களுக்கு சொத்தை எழுதி வைத்திருந்தாலும் இந்த வரி உண்டு. அவிபக்த ஹிந்து குடும்பத்தில் ஒருவர் இறந்தாலும், அவருடைய பிரிபடாத பாத்தியத்தை அடையும் மற்ற பாகஸ்தர்களும் இந்த வரி கொடுக்க வேண்டியதுதான். எந்தெந்த சொத்துக்கள் இறந்தவருடைய சொத்துக்கள் என்று தீர்மானிக்க பல விதிகள் இருக்கின்றன. சொத்தின் மதிப்பை தீர்மானம் செய்ய மத்ய ரிவன்யூ போர்டார் ஏற்பாடு செய்வார்கள். சொத்தின் மதிப்பில் இறந்தவருடைய ஈமச்சடங்குகள் செய்ய வேண்டியதற்கான செலவையும் அவர் கொடுக்க வேண்டிய கடன்களையும் கழித்து மதிப்புப் போடப்படும். இப்பொழுது இருக்கும் ஷரத்துக்களின்படி விவசாய நிலங்களின் மதிப்பு சேர்க்கப்பட மாட்டாது. மேலும் மற்ற சொத்துக்களின் மதிப்பு ஒரு லட்ச ரூபாய்க்கு மேல் இருந்தால்தான் வரி. வரி விகிதம் வருடாவருடம் டில்லிபார்லிமெண்ட் சபையாரால் நிர்ணயம் செய்யப்படும்.

புதிய சட்டங்கள்

ஜமீன் இனாம் ஒழிப்புச் சட்டம்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

[சென்னை 1948-ம் வருடத்திய 26-வது சட்டம், 19—4—1949-ல் சென்னை சர்க்கார் கெஜட்டில் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிறது. இம்முக்கிய சட்டத்தின் முதல் பகுதி 'வக்கீல்' பத்திரிகை ஜூன் இதழில் எழுதப்பட்டது. ஜூன் இதழில் சொல்லப்பட்ட விஷயங்கள் :— சட்டத்தின் நோக்கம்; ஜமீன் இனாம் ஒழிப்புச் சட்டம் எந்த இனாம் கிராமங்களைப் பாதிக்காது; இச்சட்டம் ஒவ்வொரு ஜமீன் இனாம் கிராமத்திற்கும் தனித் தனியாகவே அமுலுக்கு வரும்; இச்சட்டப்படி நியமிக்கப்படும் அதிகாரிகள்; ஒரு இனாம் கிராமம் இந்த சட்டத்திற்குள் வருமா என்று முடிவு செய்பவர் செட்டில்மெண்ட் ஆபீஸர்; அவர் தீர்ப்புக்குமேல் டிரிபுனல் என்ற சபை யாருக்கு அப்பீல் உண்டு; ஒழிக்கப்படும் ஜமீன் இனாம் கிராமங்களில் எந்த எந்த நிலங்களுக்கு குடிக்காணி பாத்தியமுள்ளவருக்கு சர்க்கார் பட்டா கொடுக்கப்படும்; எந்த எந்த நிலங்களுக்கு ஜமீன்தார் அல்லது இனாம்தாருக்கு சர்க்கார் பட்டா கொடுக்கப்படும் என்ற விஷயங்கள் சென்ற மாத இதழில் விஸ்தாரமாகச் சொல்லப்பட்டது. இனி இச்சட்டத்தின் மற்ற அம்சங்களை கவனிப்போம்.]

இச்சட்டத்தை சர்க்கார் அமுல் நடத்தும் விதம்: முக்கிய கட்டங்கள்: (1) ஜமீன் இனாம் ஒழிப்புச் சட்டம் பாசாகி விட்டபடியால், இது கெஜட்டில் பிரசுரமான 19—4—1949-ம் தேதியிலேயே எல்லா ஜமீன் இனாம் கிராமங்களும் மறைந்து போய்விட்டதாக ஆகாது. இச்சட்டத்தின் சில ஷரத்துக்களே தான் உடனே அமுலுக்கு வந்திருக்கின்றன. அதாவது மாகாண சர்க்கார் செட்டில்மெண்ட் டைரக்டர், செட்டில்மெண்ட் ஆபீஸர்கள், டிரிபுனல் சபை என்ற தனி கோர்ட் இவைகளை நியமிக்கலாம்; விதிகள் செய்யலாம். மேலும் ஒரு குறிப்பிட்ட இனாம் கிராமம் இந்த ஒழிப்புச் சட்டத்திற்குள் வருமா வராதா என்று செட்டில்மெண்ட் ஆபீசரும் அவர் தீர்ப்புக்கு மேல் அப்பீல் செய்யப்பட்டால் டிரிபுனல் சபையும் முடிவு செய்யலாம். இதுதான் முதல் கட்டம்.

(2) இரண்டாவது கட்டம்: சர்க்கார் தங்களுக்கு யுக்தமாகத் தோன்றும் காலத்தில் இச்சட்டத்தை எந்தெந்த ஜமீன் இனாம் கிராமங்களுக்கு எந்தெந்த தேதி முதல் அமுலுக்குக் கொண்டுவரப்படுமென்று தேதி குறிப்பிட்டு சர்க்கார் கெஜட்டில் விளம்பரம் செய்துவருவார்கள். இதற்கு "விளம்பரத் தேதி" என்று சொல்லப்படும். இந்த "விளம்பரத் தேதி" என்பது இச்சட்டத்தில் பல இடங்களில் உபயோகப்படுத்தப்படுவதால் இதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு இனாம் கிராமத்திற்கும் ஜமீனுக்கும் வெவ்வேறு 'விளம்பரத் தேதி'களாக இருக்கலாம்.

"விளம்பரத் தேதி" யில்தான் குறிப்பிட்ட ஜமீன்களும், இனாம்களும் மறையும்: ஒரு ஜமீன் அல்லது இனாம் கிராமத்தைப்பற்றி தேதி குறிப்பிட்டு சர்க்கார் கெஜட் விளம்பரம் செய்தால் அந்தத் தேதி முதல் விளம்பரத்தில் கண்ட ஜமீன் அல்லது இனாம் கிராமம் ஜாடாவும் சர்க்காருக்குச் சொந்தமாகும். புறம்போக்கு, தரிசு நிலங்கள், மேய்ச்சல் நிலங்கள், காடுகள், சுரங்கங்கள், ஆறு, ஏரி, குளம், மீன்பிடித்

துறைகள், ஓடத் துறைகள் உள்பட ஜாடா 'எஸ்டேட்'டும் சர்க்காருடையதாகும். அவைகளின்பேரில் ஜமீன்தார் அல்லது இனும்தார் ஏதாவது வில்லங்கங்களாவது உரிமைகளாவது ஏற்படுத்தப்பட்டிருந்தாலும் அவை அற்றுப்போகும். சர்க்காரைக் கட்டுப்படுத்தாது. ஜமீன்தார் அல்லது இனும்தார் வசமுள்ள எஸ்டேட் சம்பந்தமான கணக்கு வழக்குகளையும், பட்டா முச்சலிக்காக்களையும், படம் ப்ளான் உள்பட யாவத்து தஸ்தாவேஜுகளையும் சர்க்கார் சுவாதீனத்தில் எடுத்துக் கொள்வார்கள். இதை யார் தடுத்தாலும் அந்தத் தடையை சர்க்காரே நீக்கலாம். ஆனால் இச்சட்டப்படி குடிக்காணிக்காரரோ, அல்லது ஜமீன்தார் இனும்தாரோ சர்க்கார் பட்டா பெற பாத்தியமுள்ளவராகத் தோன்றினால், அப்படிப் பட்டவர்கள் வசமுள்ள நிலங்களை மட்டில், (இந்த பாத்தியம்) செட்டில்மெண்ட் ஆபீசராலோ, டிரிபுனல் கோர்ட்டாலோ பிறகு தீர்மானமாகும். சர்க்கார் எடுத்துக்கொள்ளக் கூடாது. பாத்தியத்தை இழந்த ஜமீன்தாருக்கும் இனும்தாருக்கும் அவர்களிடமிருந்து பாத்தியம் கொண்டாடுபவர்களுக்கும் இச்சட்டத்தின் ஷரத்துக்களின்படி நஷ்ட ஈடு பெரமட்டில் பாத்தியம் உண்டு. ஜமீன்தார், இனும்தார் இவர்களுக்கும், ரயத்து என்ற குடிக்காணி பாத்தியமுள்ளவர்களுக்கும் ஏற்கனவே இருந்த சம்பந்தம் விளம்பரத் தேதி முதல் அற்றுப் போகும். அந்தக் கிராமங்களுக்கு ஏற்கனவே அமுலிலிருந்த எஸ்டேட் லாண்ட் ஆக்ட் முதலிய சட்டங்கள் அந்த கிராமம் சம்பந்தப்பட்டவரையில் ரத்தாகும். ஆனால் மேல்வாரத்தை குறைப்பதற்காக இயற்றப்பட்ட 1947-ஆம் வருட சட்டம் மட்டில் அமுலில் இருக்கும். விளம்பரத் தேதிமுதல் திறப்பு கிராமங்களுக்கு உபயோகிக்கப்படும் சட்டங்களே இந்த கிராமங்களுக்கும் உபயோகப்படுத்தப்படும்.

'விளம்பர'த் தேதி முதல் ஜமீன் இனும் கிராமங்களுக்கு சர்க்கார் மானேஜர் நியமிக்கப்படுவார்: ஒரு ஜமீன் அல்லது இனும் கிராமத்தைப்பற்றி சர்க்கார் விளம்பரம் ஏற்பட்டவுடன் அந்த கிராமத்தை மானேஜ்மெண்டு செய்யவும் மேல்வாரம் வசூல் செய்யவும் சர்க்காரால் ஒரு மானேஜர் நியமிக்கப்படுவார். இந்த மானேஜர் ஜில்லா கலெக்டருக்கு உட்பட்டவர். ஜில்லா கலெக்டருடைய உத்திரவுப்படி நடப்பார். மானேஜர் எடுத்துக் கொள்ளும் நடவடிக்கைகளை மாற்றவும் ரத்து செய்யவும் ஜில்லா கலெக்டருக்கு அதிகாரமுண்டு. இவ்விதம் ஜமீன் இனும் எஸ்டேட்டுகளை சர்க்கார் விளம்பரத் தேதிமுதல் சுவாதீனம் எடுத்துக் கொள்ளும் விஷயத்திலும், அவைகளை இடைக் காலத்தில் நிர்வாகம் செய்யும் விஷயத்திலும், மற்றப்படி பொதுவாக இச்சட்டத்தை அமுல் நடத்தும் விஷயத்திலும் ரிவன்யூ போர்டாருக்கு பூர்ண அதிகாரம் உண்டு. செட்டில்மெண்ட் டைரெக்டர், ஜில்லாகலெக்டர்கள், செட்டில்மெண்ட் ஆபீசர்கள் இவர்கள் என்ன செய்யவேண்டுமென்பதைப்பற்றி ரிவன்யூ போர்டார் யுக்தமான உத்திரவுகளை பிறப்பிக்கலாம். மேல் கண்ட உத்தியோகஸ்தர்களுடைய எந்த உத்திரவுகளையும் நடவடிக்கைகளையும் ரத்து செய்யவும் மாற்றவும் ரிவன்யூ போர்டாருக்கு அதிகாரமுண்டு. ஆனால் டிரிபுனல் சபை என்ற தனிக் கோர்ட்டுக்கு அப்பீல் அதிகாரமுள்ள விஷயங்களில் மட்டில் ரிவன்யூ போர்டார் தலையிட அதிகாரமில்லை.

இவ்விதம் ஏன் ஒரு இடைக்கால நிர்வாகம் நடத்தப்பட வேண்டும்? விளம்பரத் தேதி முதல் ஜமீன் இனும் கிராமங்கள் திறப்பாக மாறிவிட்டவுடன் மற்ற சர்க்கார் கிராமங்களைப் போல் கிராம முன்சீப், கர்ணம் இவர்களைக் கொண்டு கிஸ்தி வசூல் முதலிய செய்ய வேண்டியதுதானே என்ற சந்தேகங்கள் உண்டாகலாம். இந்த இடைக்கால நிர்வாகம் மிகவும் அவசியமானது. ஏனென்றால் ஜமீன் அல்லது இனுமாக இருந்த கிராமங்களில் நிலங்கள் அளக்கப்பட்டு 'சர்வே' ஆகவேண்டும். இப்பொழுது சர்க்கார் கிராமங்களில் இருப்பதுபோல் நிலங்கள் தரங்களாக பிரிக்கப்பட்டு ஒவ்வொரு ஸ்தலத்திற்கும் சர்க்கார் கிஸ்தி எவ்வளவு என்று நிச்சயம் (செட்டில்மெண்ட்) செய்யப்படவேண்டும். இதற்குத்தான் "ரயத்துவாரி செட்டில்மெண்ட்" என்று பெயர். இவ்விதம் ஒவ்வொரு கிராமத்திற்

கும் சர்வேயும் ரயத்துவாரி செட்டில்மெண்டும் அந்த இடைக் காலத்தில் சர்க்காரால் நடத்தப்படும். அதற்கு அவகாசம் வேண்டும். இதுதான் இடைக்காலம்.

இடைக்காலத்தில் சர்க்கார் கிஸ்தி எவ்வளவு: ஒரு கிராமத்தில் ஜமீன் அல்லது இனும் ஒழிக்கப்பட்ட தேதியாகிய 'விளம்பரத் தேதி' முதல் மேலே சொல்லப்பட்ட 'ரயத்துவாரி செட்டில்மெண்ட்' ஏற்படும் வரை அதாவது இடைக்காலத்தில், சர்க்கார் கிஸ்தி அடியில் கண்டபடி வசூல் செய்யப்படும்.

அதாவது: (1) 1947-ல் ஏற்பட்ட மேல்வார குறைப்புச்சட்டத்தின்படி ஜமீன்தார் அல்லது இனும்தாருக்குக் கொடுக்கப்படவேண்டிய மேல்வாரம் குறைக்கப்பட்டிருந்தால், அந்தத் தொகையையே இந்த இடைக்காலத்தில் சர்க்காரும் வசூல் செய்வார்கள் (2) அவ்விதம் குறைக்கப்படாமலிருந்தால் 'விளம்பரத் தேதி'யில் ஜமீன்தார் அல்லது இனும்தாருக்கு எவ்வளவு மேல்வாரம் கொடுக்கப்படவேண்டுமோ அதை சர்க்கார் வசூல் செய்வார்கள். (3) விளம்பரத் தேதியில் ஜமீன்தார் அல்லது இனும்தாருக்கு யாதொரு மேல்வாரமும் கொடுக்காமல் அனுபவிக்கப்பட்டுவந்த நிலங்களுக்கு, அதேமாதிரி அக்கம் பக்கத்தில் உள்ள நிலக்காரர்கள் விளம்பரத் தேதியில் என்ன மேல்வாரம் கொடுத்துவந்தாரோ அதே தொகையை சர்க்காரும் வசூல் செய்வார்கள். விளம்பரத் தேதிக்கு முன்பே ஜமீன்தார் அல்லது இனும்தாரிடம் ஏதாவது மேல்வாரம் கொடுக்கப்பட்டிருந்தால் அது போக பாக்கியைத்தான் சர்க்கார் வசூல்செய்வார்கள். மேலும் 1947-ம் வருடச் சட்டத்தின்படி மேல்வாரம் குறைக்கப்பட்டு, ஆனல் அதற்கு மேற்கொண்டு ஜாஸ்தியாக மேல்வாரம் கொடுக்கப்பட்டிருந்தாலும் அப்படி ஜாஸ்தியாக கொடுக்கப்பட்ட தொகை பிந்திய வருடத்திற்கு சர்க்காரால் வைத்துக்கொள்ளப்படும். மேற்சொன்னவைகள், விவசாயம் செய்யப்படும் நிலங்களுக்குறிய விதிகள். மற்றநிலங்களுக்கு சர்க்கார் எவ்வளவு கிஸ்தி வாங்குவார்கள் என்று பிறகு சர்க்காரால் தீர்மானம் செய்யப்படும்.

'விளம்பரத்தேதி'க்கு பிறகு பழைய பாக்கியைகூட ஜமீன்தார் அல்லது இனும்தார் வசூல் செய்யக்கூடாது. சர்க்கார் மானேஜர்தான் வசூல் செய்வார்: விளம்பரம் செய்யப்பட்ட பிறகு பழைய மேல்வார பாக்கிகளையும் டிக்கிரி தொகை சிலவு தொகைகளையும் சர்க்காரால் நியமிக்கப்படும் மானேஜர்தான் வசூல் செய்யப் பாத்தியமுள்ளவர். அப்படி அவர் வசூல் செய்து அதில் 100-க்கு 10 வீதம் வசூல் செலவையும் ஜமீன்தார் அல்லது இனும்தாரால் சர்க்காருக்குக் கொடுக்கவேண்டியதாக ஏதாவது பேஷ்குஷ், க்விட்ரெண்ட், ஜோடி முதலிய வரிகள் பாக்கிகள் இருந்தால் அவைகளையும் கழித்துக்கொண்டு பாக்கியை ஜமீன்தார் அல்லது இனும்தாரிடம் கொடுப்பார். இவ்விதம் பழைய பாக்கிகளை வசூல் செய்வதில் அனுஷ்டிக்கப்படவேண்டிய விதிகள் சில உண்டு. அதாவது 1356, 1357 இந்த இரண்டு பசலிகளுக்கும் ஒரு ரயத்து கொடுக்கவேண்டிய மேல் வாரத் தொகை (வட்டி, செலவு தொகை உள்பட) ஜாடாவையும் 'விளம்பரத் தேதி'க்கு முன்போ, அல்லது அத்தேதிக்கு இரண்டு வருஷத்திற்குள்ளோ, அல்லது 1947-ம் வருட மேல்வாரக்குறைப்பு சட்டப்படி விளம்பரத் தேதிக்குப் பிறகு மேல்வாரம் குறைக்கப்பட்டால், அப்படி குறைக்கப்பட்ட தேதியிலிருந்து இரண்டு வருடங்களுக்குள்ளோ, கொடுத்துவிட்டால் அதற்கு முந்திய பசலிகளுக்குள்ள மேல்வாரம், வட்டி, செலவு தொகை ஜாடாவும் ரத்தாகி விடுகிறது. அப்படி 1356, 1357 பசலிகளுக்குள்ள ஜாடா மேல்வாரத் தொகையும் மேற்கண்டபடி கொடுக்காவிட்டால்கூட 1947-ம் வருடு மேல்வாரக் குறைப்பு சட்டப்படியே பழைய பாக்கிக்கும் கணக்கு செய்து முந்திய பசலிகளின் மேல்வாரத்தைக் கொடுத்தால் போதுமானது. இப்படி சர்க்கார் மானேஜர் வசூலிக்கக்கூடிய தொகைகளுக்கு நிலத்தின் பேரில் முதல் பொறுப்பு உண்டு.

ஒரு நிலத்தின் ரயத்து யார்; மேல் வார பாக்கி உண்டா; எவ்வளவு; என்ற சச்

சரவுகளைத் தீர்க்க: விளம்பரத் தேதிக்குப் பிறகு ஒரு நிலத்தின் ரயத்து யார் என்பது, அல்லது ஒரு ரயத்து கொடுக்கவேண்டிய மேல் வாரம் எந்த பசலிக்காவது பாக்கி உண்டா என்பது, எவ்வளவு தொகை பாக்கி என்பது சச்சரவுகள் ஏற்பட்டால் அவைகளை செட்டில்மெண்ட் ஆபீசர்தான் தீர்மானம் செய்யவேண்டும். அவர் செய்த தீர்மானம் தவறு என்று முன் பிரஸ்தாபிக்கப்பட்ட டிரிபுனல் என்ற தனி கோர்ட்டுக்கு இரண்டு மாதத்திற்குள் அப்பீல் செய்யலாம். டிரிபுனல் கோர்ட்டின் தீர்மானம்தான் இவ்விஷயங்களிலும் முடிவானது. சிவில் முதலிய கோர்ட்டுகளில் அது தவறு என்று சொல்ல முடியாது.

ஜமீன் இனும் கிராமங்களிலுள்ள கட்டடங்கள்: இச்சட்டப்படி திறப்பாக மாற்றப்படும் ஜமீன் இனும் கிராமங்களில் உள்ள நிலங்களில் எந்தெந்த நிலங்களுக்கு குடிக்காணி பாத்தியமுள்ள 'ரயத்து'க்கு சர்க்கார் பட்டா கொடுக்கப்படுமென்றும், எந்தெந்த நிலங்களுக்கு ஜமீன்தார் அல்லது இனும்தாருக்கு சர்க்கார் பட்டா கொடுக்கப்படுமெனவும் முன் இதழில் விவரமாய் சொல்லப்பட்டது. இவைகளைத் தவிர மற்ற புறம்போக்கு, காடுகள், மேய்ச்சல் நிலங்கள், ஆறு, குளம், ஏரி, சுரங்கங்கள், முதலியவைகள் விளம்பரத் தேதி முதல் சர்க்கார் சொத்தாகும் என்றும் சொல்லப்பட்டது. இவைதவிர ஜமீன் இனும் கிராமங்களிலுள்ள கட்டிடங்களைப்பற்றியும் இச்சட்டத்தில் விதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

அவையாவன: (1) ஜமீன்தாருக்கோ இனும்தாருக்கோ சொந்தமாக இருந்து, (ஆபீசாக) அதாவது கிராமக் காரியங்களை நிர்வாகம் செய்ய காரியாலயமாகமட்டில் அவரால் உபயோகப்படுத்திவந்த கட்டடங்கள் விளம்பரத்தேதி முதல் சர்க்காருடைய சொத்தாகும்.

(2) ஜமீன்தார் அல்லது இனும்தாருக்குச் சொந்தமான கட்டடங்கள் அல்லது அக்கட்டடங்களின் முக்கிய பாகங்கள், விளம்பரத் தேதியில் மத சம்பந்தமான அல்லது கல்வி, தர்மம் சம்பந்தமான ஸ்தாபனங்களின் அனுபோகத்தில் இருந்தாலும் அக்கட்டடங்களும் சர்க்காருடையதாகும். ஆனால் மேற்கண்ட ஸ்தாபனங்கள் நடக்காமல் நின்றுபோய்விட்டால் இவை மறுபடியும் ஜமீன்தார் அல்லது இனும்தார் அல்லது அவருடைய வார்சுக்கு திரும்பி வந்துவிடும்.

(3) மேற்கண்டபடி ஆபீசு அல்லது தர்மம், கல்வி, மதம் சம்பந்தமான ஸ்தாபனங்கள் நடத்தப்பட்டு வந்த கட்டடங்களை 1—7—1947-க்குப் பிறகு 'விளம்பரத் தேதி'க்கு முன் ஜமீன்தாரோ இனும்தாரோ விற்றிருந்தாலும், இனமாக வேறு ஒருவருக்கு கொடுத்திருந்தாலும், அவைகளில் ஆபீஸ் அல்லது மேற்கண்ட ஸ்தாபனங்களை நடத்தாமல் இருந்தாலும் அக்கட்டடங்களின் விலையை டிரிபுனல் சபையார் மதிப்பிட்டு அந்தத்தொகையை ஜமீன்தார் அல்லது இனும்தார் அடையக்கூடிய நஷ்ட ஈட்டிலிருந்து எடுத்து சர்க்காருக்கு கொடுக்கப்படும்.

(4) இவை தவிர மற்ற கட்டடங்கள் விளம்பரத் தேதியில் யார் அந்தக் கட்டடங்களின் சொந்தக்காரரோ அவருடையதே ஆகும். ஆனால் இவைகளுக்கு சர்க்கார் தீர்வை போடலாம். ஏற்கனவே ஜமீன்தார் அல்லது இனும்தாருக்கு அக்கட்டடங்களுக்காக ஏதாவது தொகைகள் செலுத்தவேண்டியதாக இருந்தால் அவைகளை சர்க்காரே வசூல் செய்யலாம். மேலே கண்ட சட்டங்கள் சம்பந்தமாய் ஏதாவது பிரச்னை ஏற்பட்டால் சர்க்காரே அதை முடிவு செய்ய பாத்தியமுள்ளவர்கள். கோர்ட்டுகளுக்கு இதில் அதிகாரமில்லை.

ஜமீன்தார்களுக்கும், இனும்தார்களுக்கும் சர்க்கார் நஷ்டஈடு கொடுப்பார்கள்: இதுவரை நிலத்தின் சொந்தக்காரர்களிடமிருந்து மேல்வாரத்தை வசூல் செய்து அடைந்து வந்த ஜமீன் தார்களும், இச்சட்டத்தால் அந்த பாத்தியதை இழப்பார்கள். இழந்தாலும் அவர்களுக்கு இச்சட்டப்படி அதற்காக சர்க்கார் நஷ்டஈடு கொடுக்க வேண்டும்.

நஷ்டஈடு எவ்வளவு என்று கணக்குச் செய்யவேண்டிய முறையும் அதைத் தீர்மானிக்கும் அதிகாரிகள் யார் என்றும் இச்சட்டத்தில் வியக்தமாய் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனுல் அப்படி தீர்மானம் செய்யப்பட்ட நஷ்டத்தொகையை எவ்விதம் ஜமீன்தார் அல்லது இனும்தாருக்கு பட்டுவாடா செய்வது என்பதைப்பற்றி இனிமேல்தான் சர்க்கார், சட்டசபையின் சம்மதத்தின் பேரில், விதிகள் ஏற்படுத்துவார்கள். இந்த நஷ்டஈடு எந்த ரூபமாய் கொடுக்கப்படும்; ரொக்கமாகவோ, சர்க்கார் பத்திரங்களாகவோ, எப்பொழுது கொடுக்கப்படும்; ஒரே தடவையாகக் கொடுக்கப்படுமா, தவணையில் கொடுக்கப்படுமா என்று இவ்விதிகள் மூலம் நிர்ணயம் செய்யப்படும்.

நஷ்டஈடு எவ்வளவு? ஒவ்வொரு ஜமீன் இனும் எஸ்டேட்டுக்கும் முதலில் 'அடிப்படையான வருடாந்திரத் தொகை' என்பது நிர்ணயிக்கப்படும். (இது என்ன என்பதை அடுத்த பாராவில் சொல்லப்பட்டிருக்கிறது). இந்த அடிப்படையான வருடாந்திரத் தொகையை ஆதாரமாகக் கொண்டு நஷ்ட ஈடு கணக்குச் செய்து கொடுக்கப்படும்.

அடிப்படையான வருடாந்திரத் தொகை	நஷ்ட ஈடு
(1) ரூ 1000-க்கு மேற்படாமல் இருந்தால்	அதைப்போல் 30 மடங்கு
(2) ரூ 1000-க்கு மேல் ரூ 3000-க்கு மேற்படாமல் இருந்தால்	அதைப்போல் 25 மடங்கு அல்லது ரூ. 30,000; எது அதிகமோ அது
(3) ரூ.3000-க்கு மேல் ரூ. 20,000-க்கு மேற்படாமல் இருந்தால்	அதைப்போல் 20 மடங்கு அல்லது ரூ. 75,000; எது அதிகமோ அது
(4) ரூ. 20,000-க்கு மேல் ரூ. 50,000-க்கு மேற் படாமல் இருந்தால்	அதைப்போல் 17½ மடங்கு அல்லது ரூ. 4,00,000; எது அதிகமோ அது
(5) ரூ. 50,000-க்கு மேல் ரூ. 1,00,000-க்கு மேற்படாமல் இருந்தால்	அதைப்போல் 15 மடங்கு அல்லது ரூ. 8,75,000; எது அதிகமோ அது
(6) ரூ. 1,00,000-க்கு மேல் எவ்வளவு இருந்தாலும்	அதைப்போல் 12½ மடங்கு அல்லது ரூ. 15,00,000; எது அதிகமோ அது

இது கோயில், கல்வி, தர்மம் சம்பந்தப்பட்ட தர்ம ஸ்தாபனங்களுக்குப் பொருந்தாது.

'அடிப்படையான வருஷாந்திரத் தொகை' என்பது என்ன? இதைக் கண்டுபிடிப்பதில் ஜமீன் எஸ்டேட்களுக்கும் இனும் எஸ்டேட்களுக்கும் வித்தியாசம் உண்டு. ஜமீன் எஸ்டேட்களில் சர்வேயும் செட்டில்மெண்டும் நடத்தப்படும் என்று சொல்லப்பட்டதல்லவா. அந்த செட்டில்மெண்டில் ஏற்பட்ட ரயத்துவாரித் தீர்வையில் 100க்கு 5 வீதம் ஆபீஸ் சிலவுக்கும் 100-க்கு 3½ வீதம் பாசன மராமத்து வேலைக்காகவும் போக பாக்கியுள்ள ரயத்துவாரித் தீர்வையில் 3-ல் 1 பங்கும் ஜமீன்தாருக்கு கிடைத்துவந்த மற்றும் சில சில்லரை வருமானத்தில் 3-ல் 1 பங்கும் சேர்ந்து 'அடிப்படையான வருஷாந்திரத் தொகை' ஆகும். இனும் கிராமங்களில் இச்சட்டப்படி ரயத்துவாரி செட்டில்மெண்டில் ஏற்பட்ட சர்க்கார் தீர்வை (சில சில்லரைப் பிடித்தம் நீக்கி) ஜாடாவும் "அடிப்படையான வருடாந்திரத் தொகை" ஆகும். அதாவது (பொதுவாகப் பார்த்தால்) ஜமீன் எஸ்டேட்டுகளில் புதிதாய் இச்சட்டப்படி ஏற்பட்ட ரயத்துவாரி தீர்வையின் 3-ல் 1 பங்கையும் இனும் கிராமங்களில் புதிதாய் இச்சட்டப்படி ஏற்பட்ட ரயத்துவாரித் தீர்வை ஜாடாவையும் தான் "அடிப்படை வருஷாந்திரத் தொகையாக" வைத்துக் கொண்டு மேற் சொல்லியபடி நஷ்டஈடு கணக்குச் செய்யப்படும்.

குறிப்பு: இப்படி கணக்குச் செய்யும் விஷயத்தில் சட்டத்தில் கண்ட சில் நுட்பமான சில்லரை பிடித்தங்களை இங்கு சொல்லப்பட வில்லை. நஷ்டஈடு சம்பந்தமாய் சர்க்கார் விதிகள் ஏற்படுத்திய பிறகு இவை விவரிக்கப்படும்.

இவைகளை டைரக்டர் தான் நிச்சயம் செய்வார்: 'அடிப்படையான வருஷாந்திரத் தொகை' எவ்வளவு என்பதையும்

நஷ்டஈடு எவ்வளவு என்பதையும் டைரக்டர் என்ற உத்தியோகஸ்தர் தான் நிச்சயம் செய்வார். அதன் பேரில் மூன்று மாதத்திற்குள் ரெவன்யூ போர்டாருக்கு அப்பீல் உண்டு. அவர்கள் செய்யும் தீர்மானம் தான் முடிவானது.

கோவில் முதலிய மத ஸ்தாபனங்களுக்கும், கல்வி, தர்ம ஸ்தாபனங்களுக்கும் வருடா வருடம் வரும்படிமட்டில் நஷ்டஈடாகக் கொடுக்கப்படும்: ஜமீன்தார்களுக்கும், இனும்தார்களுக்கும் சர்க்கார் நஷ்டஈடு கொடுப்பார்கள் என்றும், அது எவ்வளவு என்றும் முதலில் நிச்சயம் செய்து பிறகு அதை மொத்தமாகவோ, தவணையாகவோ கொடுப்பார்கள் என்று சொல்லப்பட்டது. ஆனால் கோவில், கல்வி ஸ்தாபனம், சத்திரம் முதலிய தர்ம ஸ்தாபனம் இவைகளுக்கு இச்சட்டப்படி நஷ்டஈடு கொடுக்கவேண்டி இருந்தால் அது மொத்தமாக கொடுக்கப்படமாட்டாது. ஏற்கனவே பிரஸ்தாபிக்கப்பட்ட விதமாய் கணக்குச் செய்து "அடிப்படை வருடாந்திரத் தொகை" யைமட்டில் அந்த ஸ்தாபனங்களின் செலவுக்காக வருடா வருடம் சர்க்காரால் கொடுக்கப்பட்டுவரும். இதற்கு "தஸ்தீக் வர்த்தனை" என்று பெயர். இந்தத் தொகை எவ்வளவு என்று டைரக்டர் தான் தீர்மானம் செய்வார். இது சம்பந்தமாயும் அக்கரையுள்ளவர்கள் மூன்று மாதத்திற்குள் ரிவன்யூ போர்டாருக்கு அப்பீல் செய்யலாம். ரிவன்யூ போர்டாருடைய தீர்மானமே முடிவானது. ஏற்கனவே இந்த ஸ்தாபனங்கள் வருடாவருடம் அடைந்து வந்த சராசரி வரும்படியைவிட இந்த "தஸ்தீக் வர்த்தனை" குறைவாக இருந்தால், அப்படித் தண்டுவிழும் வருட வரும்படியையும் சர்க்கார் கொடுத்துவருவார்கள். சராசரி வரும்படி விளம்பரத் தேதிக்கு முன் உள்ள ஐந்து பசலிகளின் வரும்படியிலிருந்து கணக்கு செய்யப்படும்.

மற்றவர்களுக்கு நஷ்ட ஈடு பட்டுவாடா செய்யும் விதம்: இவ்விதம் ஒவ்வொரு எஸ்டேட்டுக்கும், ஜமீன்தார் அல்லது இனும்தாருக்கும் சர்க்காரால் கொடுக்கப்படவேண்டிய நஷ்ட ஈடு எவ்வளவு என்று தீர்மானமான பிறகு, இது விஷயமாய் சர்க்கார் செய்யும் விதிகளை அனுசரித்து, அந்த நஷ்ட ஈட்டுத் தொகையை ஏற்கனவே சொல்லப்பட்ட "டிரிபுனல்" சபையாரின் ஆபீசில் சர்க்கார் கட்டிவிடுவார்கள். அப்படி தொகை கட்டிய ஆறு மாதத்திற்குள் (அல்லது டிரிபுனல் சபையாரால் அனுமதிக்கப்பட்ட காலத்திற்குள்) அந்த நஷ்ட ஈடுத் தொகையை அல்லது அதில் ஒரு பாகத்தை அடைய பாத்தியமுள்ள ஜமீன்தார், இனும்தார், அவருடைய குடும்பத்தினர், பங்கு பாத்தியமுள்ளவர், ஜீவனும்ச பாத்தியமுள்ளவர்கள், கடன்காரர்கள் முதலிய யாவரும் அவரவர்களுக்கு கிடைக்க வேண்டிய தொகைகளுக்காக மனுப்போட வேண்டும். அப்படி மனுப்போடாதவர் தன் பாத்தியதையை இழந்து போவார். டிரிபுனல் சபைக்கு மனுப்போட்ட யாவருக்கும் நோட்டீஸ் அனுப்பி விசாரணை செய்து அவரவர்கள் அடையக்கூடிய தொகை எவ்வளவு என்று டிரிபுனல் சபையார் தீர்மானம்செய்வார்கள். நஷ்ட ஈடு முடிவாக எவ்வளவு என்று ஏற்படும் முன் இனும்தார் அல்லது ஜமீன்தாருக்கு வருடா வருடம் உத்தேசமாய் அடிப்படையான வருடாந்திரத் தொகையை சர்க்கார் கொடுத்து வரலாம்.

நஷ்ட ஈடு விஷயத்தில் அப்பீல் உண்டு: நஷ்டஈடு பட்டுவாடா செய்யும் விஷயமாய் டிரிபுனல் சபையாரால் செய்யப்படும் முடிவின் பேரிலும் ஒரு விசேஷ டிரிபுனல் சபைக்கு மூன்று மாதத்தில் அப்பீல் செய்யலாம். இந்த டிரிபுனல்சபை என்பது சென்னை ஹைகோர்ட் பிரதம நீதிபதி அவர்களால் நியமிக்கப்பட்ட இரண்டு நீதிபதிகள் அடங்கியதாகும். இந்த இரண்டு நீதிபதிகளும் ஒரே அபிப்பிராயமாய்த் தீர்ப்புச் சொன்னால் அதே முடிவான தீர்ப்பு. அவ்விருவர்களுக்குள் அபிப்பிராய பேதமிருந்தால் பிரதம நீதிபதி அவர்களால் நியமிக்கப்படும் வேறு மூன்றாவது நீதிபதி சொல்லும் தீர்ப்பே முடிவானது.

சர்க்கார் விதிகள் செய்யலாம்: இச்சட்டத்தின் ஷரத்துக்களை அமுல் நடத்த சர்க்கார் விதிகள் செய்வார்கள்.

முற்றும்

ஷாப் சட்டம்

187687

(ஜூன் மாத இதழ் தொடர்ச்சி)

(V. தியாகராஜன் B. A., B. L.,)

[ஷாப் சட்டத்தின் எல்லா முக்கிய அம்சங்களையும் சம்பந்தப்பட்ட முதலாளிகளும் சிப்பந்திகளும் சரிவர தெரிந்துகொள்ளும் பொருட்டு இவ்விஷயத்தை சென்ற மே மாத இதழ் முதல் கேள்வி-பதில் என்ற நடையில் எழுதி வருகிறோம். மே மாத இதழில் ஷாப் சட்டத்திற்கு உட்பட்டவர்கள் யார்; கடைகள் முதலிய ஸ்தாபனங்கள் திறந்து மூடும் நேரம்; வார விடுமுறை; சிப்பந்திகளின் வயது; சிப்பந்திகளின் தினசரி வேலை நேரம் இவ்விஷயங்கள் சொல்லப்பட்டன. ஜூன் மாத இதழில் சிப்பந்தியின் வருடாந்திர விடுமுறை நாட்கள், சிப்பந்தியின் சம்பளம் இவைகளைப் பற்றி விவரமாய் சொல்லப்பட்டது.]

அபராதம் முதலிய சம்பளப் பிடித்தம்

கேள்வி: முதலாளியிடம் சிப்பந்தி கடன் வாங்கியிருந்தால் அக்கடனை மாதச் சம்பளத்தில் ஈடு செய்து கொள்ளலாமா? அல்லது அக்கடனுக்காக ஒரு பாகத்தை மாதாமாதம் சம்பளத்தில் பிடித்துக்கொள்ளலாமா?

பதில்: இது சம்பந்தமான விதிகளை முதலாளிகள் மிகவும் கவனிக்கவேண்டும். சிப்பந்தியின் சம்பளத்தில் இச்சட்டத்தில் கண்ட சில குறிப்பிட்ட பிடித்தங்களைத் தவிர வேறு பிடித்தங்கள் செய்யக்கூடாது. வேறு பிடித்தங்கள் செய்வது குற்றமாகும். [34—45] அட்வான்சு அல்லாத கடனுக்காக சம்பளத்தில் பிடித்தம் கூடாது. பிடித்தங்கள் செய்யக்கூடிய விஷயங்களுக்கும் கள் இருக்கின்றன. பொதுவாக பிடித்தங்கள் எதற்காக செய்யலாமென்றால்:

(1) அபராதம். (2) வேலைக்கு வராமல் இருந்த நாட்களுக்குப் பிடித்தம். (3) சிப்பந்தியின் வசம் ஒப்புவிக்கப்பட்ட சாமான்கள் அல்லது தொகைகள் அச்சிப்பந்தியின் தவறாலோ, அஜாக்கிரதையாலோ நஷ்டம் ஏற்பட்டிருந்தால் அந்த நஷ்டம். (4) முதலாளி தன் பொறுப்பில் சிப்பந்திக்கு வசிக்க வீட்டு வசதி செய்திருந்தால் அதற்கு வாடகை முதலியவை. (5) முதலாளியால் சிப்பந்திக்கு வேறு சௌகரியங்கள் செய்து கொடுக்கப்பட்டிருந்தால் (இது மாகாண சர்க்காரால் அங்கீகரிக்கப்பட்டதாக இருக்க வேண்டும்.) (6) முதலாளியிடம் சிப்பந்தி வாங்கியிருக்கும் முன் துகை அல்லது அட்வான்ஸ் அல்லது ஜாஸ்தியான சம்பளப் பற்றுதல். (7) சிப்பந்தி ஏதாவது சர்க்காருக்கு வருமான வரி கொடுக்கவேண்டியிருந்தால். (8) கோர்ட் அல்லது பிடித்தம் செய்ய அதிகாரமுள்ள அதிகாரியின் உத்திரவுப்படி ஏற்பட்ட பிடித்தம். (9) சர்க்கார் அங்கீகாரமுள்ள பிராவிடண்ட் பண்டுக்குச் சந்தா. (10) சர்க்கார் அங்கிகரித்த கோவாபரேடிவ் சொசைடி அல்லது இன்ஷ்யூரன்சுக்கு கட்டவேண்டிய தொகை. இவைகளைத்தான் இது விஷயமாய் செய்யப்பட்ட விதிகளின் பிரகாரம் சிப்பந்தியின் சம்பளத்திலிருந்து பிடித்தம் செய்யலாம். வேறு பிடித்தம் செய்வது குற்றமாகும். [34-45]

கேள்வி: முதலாளி பிடித்தம் என்று செய்யாமல் ஜாடா சம்பளத்தையும் சிப்பந்தியிடம் கொடுத்து, அச்சிப்பந்தி அதை திரும்பத் தன்னிடம் கொடுக்கும்படி ஏற்பாடு செய்தாலென்ன?

பதில்: சிப்பந்தியால் முதலாளிக்குக் கொடுக்கப்படும் ஒவ்வொரு தொகையும் இச்சட்டப்படி "சம்பளப் பிடித்தமாக" கருதப்படும். சம்பளப் பிடித்தம் எப்படி குற்றமோ அப்படியேதான் இதுவும். [34 (1), விவரணம்-45]

இதுபோல் [] பிராக்கெட்டுக்குள் இருக்கும் எண் சட்டத்தின் செக்ஷனைக் குறிக்கும்

கேள்வி: அபராதத்திற்காக சம்பளப் பிடித்தம் செய்யலாமென்றால், முதலாளி தன் இஷ்டப்படி சிப்பந்திக்கு அபராதம் போடலாமா ?

பதில்: கூடாது. முதலில், சிப்பந்திகளுக்கு அபராதம்போட முதலாளி லேபர் கமிஷனரிடம் அனுமதி பெறவேண்டும். அதற்கு முதலாளி லேபர் கமிஷனருக்கு மனுப்போட வேண்டும். அந்த மனுவில் வியக்தமாய் சிப்பந்தி எந்தக் காரியத்தை செய்தால் அல்லது செய்யாமலிருந்தால் அபராதம்போட தனக்கு அதிகாரம் தேவை என்று கண்டு ஆங்கிலத்தில் 2 பிரதிகளுடன் அனுப்ப வேண்டும். மேலும் முதலாளியே நேரில் அபராதம் போடும் உரிமையை பெற உத்தேசமில்லாவிட்டால் தன்னிடம் உத்தியோகம் பார்க்கும் எந்த எந்த உத்தியோகஸ்தருக்கு எந்த எந்த வகை சிப்பந்திகள் மீது அபராதம் விதிக்க அதிகாரம் கொடுக்கப் படவேண்டுமென்று கண்டு இரண்டு பிரதிகள் அனுப்பவேண்டும். லேபர் கமிஷனர் மனுவை விசாரித்து தனக்கு யுக்தமாய் தோன்றும் விதம் அப்படியேயோ அல்லது அதை மாற்றியோ அங்கீகரிக்கலாம். லேபர் கமிஷனர் செய்த உத்திரவை ஆங்கிலத்திலும், அந்தஸ்தாபன சிப்பந்திகளின் பெரும்பான்மையோரின் தாய்மொழியிலும் எழுதி ஸ்தாபனத்தின் வாசலில் யாவருக்கும் தெரியும் விதம் விளம்பரப் படுத்த வேண்டும். லேபர் கமிஷனர் உத்திரவில் காணப்பட்டவர்கள் தான் அபராதம் போடலாம். அபராதம் போடுபவர் சிப்பந்தியைக் கூப்பிட்டு வாய் மொழியாய் எதற்காக அபராதம் விதிக்கப் போகிறார் எவ்வளவு போடப் போகிறார் என்றும் சொல்லி சிப்பந்தி ஏதாவது சமாதானம் சொன்னால் அதையும் கேட்டு எல்லாவற்றையும் எழுதி சிப்பந்தியின் கையெழுத்தையும் அதில் வாங்க வேண்டும். முதலாளி அல்லாமல் வேறு உத்தியோகஸ்தர் அபராதம் போட்டால் உடனே அவர் அதை முதலாளியிடம் தெரிவித்துவிடவேண்டும். அபராதம் விதிக்க இவ்விதம் அனுமதி பெற்ற முதலாளிகள் நமூனா B ப்படி அபராத ரிஜிஸ்தர் வைத்துக் கொள்ள வேண்டும். [ரூல் II (3) a]

நமூனா B

அபராத ரிஜிஸ்தர்

ஸ்தாபனத்தின் பெயர்.............

தொடர் நம்பர்.	பெயர்	தகப்பன் அல்லது புருஷன் பெயர்	எதற்காக அபராதம்	சிப்பந்தி சமாதானம் சொன்னாரா சொன்னால் தேதி.	மொத்த சம்பளம்	அபராதம் விதித்த தேதியும் தொகையும்	அபராதம் வசூலான தேதி	ஷேரா
1	2	3	4	5	6	7	8	9

கேள்வி: இவ்விதம் கஷ்டப்பட்டு ஒரு முதலாளி அபராதம் விதிக்க லேபர் கமிஷனரிடம் அதிகாரம் பெற்று சிப்பந்திக்கு அபராதம் போட்டால் அந்த அபராதத்தொகை முதலாளிக்கு மிச்சம் தானே?

பதில்: அதுதான் இல்லை. அபராதத்தொகையை முதலாளி, தன் சொந்த உபயோகப்படுத்திக் கொள்ளக் கூடாது. அதை தன்னிடம் வேலையிலிருக்கும் சிப்பந்திகளின் பொது உபயோகத்திற்காக செலவு செய்யப் பட வேண்டும். அபராதத் தொகையைக்கொண்டு எந்தச்செலவு செய்ய வேண்டும் என்று லேபர் கமிஷனர் உத்திரவு செய்வார். அதன் விபரத்தையும் அபராத ரிஜிஸ்டரில் (B நமூனப்படி வைக்கப்படும் ரிஜிஸ்டரில்) முதலில் காண்பிக்க வேண்டும். அபராதத்தைக் கொண்டு இவ்விதம் முதலாளி செலவுசெய்வதற்கு கணக்கும் ரசீதுகளும் வைத்துக்கொள்ளவேண்டும்.

கேள்வி: அப்படியே அபராதம் போட்டால் எவ்வளவு தொகை வரையில் போடலாம்?

பதில்: சிப்பந்தியின் ஒரு சம்பள கெடுவுக்குள் சம்பளத்தில் ஒரு ரூபாய்க்கு

அரை அணுவுக்கு மேல் அபராதம் விதிக்கக்கூடாது. உதாரணமாய் வாரச்சம்பளம் ரூ 10 ஆனல் ஒருவாரத்தில் 5-அணுவுக்கு மேலும்; மாதச் சம்பளம் ரூ 40-ஆக இருந்தால் ஒரு மாதத்தில் ரூ 1-4-0க்கு மேலும் அபராதம் போடக் கூடாது. 15 வயது பூர்த்தி ஆகாத பையனுக்கு அபராதமே போடக்கூடாது. [35 (4) (5)]

கேள்வி: அபராதத்தை எதற்குள் வசூல் செய்வது?

பதில்: எதற்காக அபராதம் போடப்பட்டதோ அந்தத் தவறு நடந்த 60 தினங்களுக்குள் வசூல் செய்யப்பட வேண்டும். பிறகு செய்யக்கூடாது. [35 (6) (7)]

கேள்வி: சிப்பந்தி வேலைக்கு வராமல் இருந்தால் அவர் சம்பளத்தில் எவ்வளவு பிடித்தம் செய்யலாம்?

பதில்: அச் சிப்பந்தி எவ்வளவு நேரம் வேலைக்கு வராமல் இருக்கிறாரோ அந்த நேரத்திற்குள்ள விதாசார சம்பளத்தையே தான் பிடித்தம் செய்யலாம். ஆனல் 10 அல்லது அதற்மேற்பட்ட நபர்கள் வேலை செய்யும் இடத்தில், சிப்பந்திகள் ஒக்குமத்தாய், முதலாளிக்கு ஒப்பந்தப்படி நோட்டீஸ் கொடுக்காமலும், அகாரணமாயும், வேலைக்கு வராமலிருந்தாலும் (ஸ்ட்ரைக் செய்தாலும்), அல்லது வந்து வேலை செய்யாமல் சும்மா இருந்தாலும் (ஸ்டே இன்-ஸ்ட்ரைக் செய்தாலும்) அச்சிப்பந்தியின் 8-நாள் சம்பளம் வரை பிடித்தம் செய்யலாம். ஆனல் இது சர்க்கார் செய்யும் விதிகளுக்குட்பட்டிருக்க வேண்டும். [36 (2)]

கேள்வி: சிப்பந்தியின் அஜாக்கிரதையாலோ அல்லது தவருலோ முதலாளியின் பொருளுக்கோ அல்லது தொகைக்கோ நஷ்டம் ஏற்பட்டால் அதற்காக எவ்வளவு தொகை சிப்பந்தியின் சம்பளத்தில் பிடிக்கலாம்?

பதில்: நஷ்டம் எவ்வளவோ அவ்வளவு தான் பிடிக்கலாம். முதலில் அது விஷயமாய் சிப்பந்தியைக் கேட்டு அவர் சொல்லும் சமாதானத்தைக் கேட்க வேண்டும். இதற்காக தனியாக நமூனு C. படி முதலாளி ஒரு ரிஜிஸ்டர் வைத்துக்கொண்டு அதில் தனக்கு ஏற்பட்ட நஷ்டத்திற்காக சிப்பந்தியின் சம்பளத்தில் செய்யப்பட்ட பிடித்தத்தை பதிந்துகொள்ள வேண்டும். [37-ரூல் 11 (4)]

நமூனு C
நஷ்ட ஈடு ரிஜிஸ்டர்

ஸ்தாபனத்தின் பெயர்.................

தொடர் நம்பர்.	பெயர்	தகப்பன் அல்லது புருஷன் பெயர்	சிப்பந்தியால் செய்யப்பட்ட நஷ்டம்	சிப்பந்தி சமாதானம் சொன்னாரா? சொன்னால் அதன் தேதி	பிடித்தத் தொகை - பிடித்தம் செய்த தேதி	எவ்வளவு தொகையில் வசூல் செய்யவேண்டும்	மொத்த நஷ்டத் தொகை வசூலான தேதி	ஷரா
1	2	3	4	5	6	7	8	9

கேள்வி: சிப்பந்தி முதலாளியின் வீட்டில் குடியிருந்து வேறு சௌகரியங்களையும் அடைந்து வந்தால் அதற்காக சம்பளத்தில் எவ்வளவு பிடிக்கலாம்?

பதில்: முதலில் இவ்விதம் வீட்டின் வாடகையையும் இதர சௌகரியங்களுக்குள்ள தொகையையும் கொடுப்பதாக சிப்பந்தி ஒப்புக்கொள்ள வேண்டும். நியாயமாய் வீட்டிற்குள்ள வாடகையையும் சௌகரியங்களுக்குள்ள செலவுகளையும் தான் பிடித்தம் செய்யலாம். இது சம்பந்தமாயும் சர்க்கார் விதிகள் செய்யலாம். [38]

அட்வான்சு

கேள்வி: முதலாளியிடம் சிப்பந்தி முன்கூட்டியே தொகைகள் வாங்கி இருந்தால் அது தீரும்வரை சம்பளத்தில் பிடித்தம் செய்து வரலாமா?

பதில்: 'அட்வான்சு' என்று சொல்லக் கூடிய சில தொகைகளையே சம்பளத்தில் பிடித்தம் செய்து முதலாளி வசூல் செய்ய லாம். ஒரு சிப்பந்தி வேலையில் அமருவ தற்கு முன்பே முதலாளியிடம் முன் பணம் வாங்கி இருந்தால் அத்தொகையை சிப்பந்தி வாங்கும் முதல் சம்பளத்திலிருந்தே பிடித் தம் செய்ய ஆரம்பித்து விடவேண்டும். (அதாவது இக்கடனை எப்பொழுதும் சிப் பந்தி சுமந்துவரும்படி விடக்கூடாது.) ஆனால் பிரயாணச் செலவுக்காக சிப்பந்தி இடம் கொடுத்த தொகைகளை சம்பளத்திலிருந்து பிடித்து வசூல் செய்யக் கூடாது. பிந்தி செய்யப்போகும் வேலைக் காக என்று சிப்பந்திக்கு முன்பணம் (அட் வான்ஸ்) கொடுக்கப்பட்டிருந்தால், அத் தொகை சிப்பந்தியின் இரண்டுமாத சம் பளத்திற்குமேல் போகக்கூடாது. அதற்கு மேல் முன்பணம் கொடுக்க தொழிற்சாலை இன்ஸ்பெக்டரிடம் (இன்ஸ்பெக்டர் ஆப் பாக்டரீஸ்) முன்னடியே அனுமதி பெற வேண்டும். அப்படிக் கொடுக்கப்படும் முன் பணத்தை பிந்திய 12 மாத சம்பளத்திற் குள் தவணையாக பிடித்தம் செய்துவர வேண்டும். மாதாமாதம் சிப்பந்தியின் சம் பளத்தில் இதற்காக 3-ல் 1-க்கு மேல் பிடிக்கக்கூடாது. சிப்பந்தியின் சம்பளம் ரூ. 20 அல்லது அதற்குள் இருந்தால் 4-ல் 1-க்குமேல் பிடிக்கக்கூடாது. இதெல்லாம் இச்சட்டம் அமுலுக்கு வந்த பிறகு கொடுக் கப்படும் முன்பணத்தைப்பற்றியவை. சட் டம் வருவதற்கு முன்பே கொடுக்கப்பட் டிருக்கும் தொகையைப் பற்றிய வரையில் ஷாப்சட்ட ரூல்கள் ஏற்பட்ட 16-11-1948 லிருந்து ஒரு மாதத்திற்குள் தொழிற்சாலை இன்ஸ்பெக்டருக்கு விபரம் தெரிவித்திருந் தால் அதை வசூல் செய்யும் விஷயத்தில் இந்தப் புது ரூல்கள் பாதிக்காது. முன் பணத்தை (அட்வான்சை) சிப்பந்தியிடம் வசூல் செய்வதைக் காண்பிக்க முதலாளி நமூனா D படி ஒரு ரிஜிஸ்டர் வைத்துக் கொண்டு அதில் எழுதிவரவேண்டும். [39 ரூல் 13]

நமூனா D

சிப்பந்திக்கு கொடுக்கப்பட்ட (அட்வான்ஸ்) முன்பண ரிஜிஸ்டர்

ஸ்தாபனத்தின் பெயர்...............

தொடர் நம்பர்.	பெயர்	தகப்பன் அல்லது புருஷன் பெயர்	முன்பணம் எந்த தேதியில் கொடுக்கப்பட்டது	எதற்காக தொகை கொடுக்கப்பட்டது	எவ்வளவு தவணைகளில் தொகையை திருப்பிக் கொடுக்கவேண்டியது	தவணை திருப்பிக்கொடுக்க வாயிதா	மொத்தத் தொகை திருப்பிக்கொடுக்கப்பட்ட தேதி.	ஷரா.
1	2	3	4	5	6	7	8	9

கேள்வி: சிப்பந்தியின் சம்பள சம்பந்த மாக முதலாளி ஏதாவது ரிஜிஸ்டர் வைத் துக்கொள்ள வேண்டுமா?

பதில்: ஒவ்வொரு ஸ்தாபனமும் சம் பள ரிஜிஸ்டர் என்று ஒரு ரிஜிஸ்டர் வைத் துக்கொள்ள வேண்டும். இதற்கு சட்டத் தில் ஒன்றும் நமூனா கிடையாது. ஆனால் அதில் கீழ்கண்ட விபரங்கள் இருக்க வேண் டும்: (1) சிப்பந்திகள் மொத்த சம்பளம். (2) சம்பளத்திலிருந்து செய்யப்பட்ட மொத்தப் பிடித்தங்கள். (3) பாக்கி சம் பளத்தில் சிப்பந்திக்கு கொடுக்கப்பட்ட தொகை. இவைகளைக் காண்பிக்கும்படி அவரவர்கள் சௌகரியப்படி ரிஜிஸ்டர்கள் வைத்துக்கொள்ளலாம். ஆனால் சம்பள ரிஜிஸ்டர் கட்டாயமாய் வைத்துக்கொள்ள வேண்டும். [ரூல் 11 (5)]

கேள்வி: ஒரு சிப்பந்தி திடீரென்று வேலை வேண்டாமென்று நின்று விட்டால் அதற்காக நஷ்ட ரூபமாக, சிப்பந்திக்குக்

பலவித புதுரக ஜவுளிகள் கிடைக்குமிடம்:
ஸ்ரீ வாசவி ஸ்டோர்ஸ், பெரிய கடைத்தெரு, கும்பகோணம்.

கொடுக்க வேண்டிய சம்பளத்தில், ஏதாவது பிடித்தம் செய்யலாமா?

பதில்: சிப்பந்தி 15-வயதுக்குட்பட்டவராக இருந்தால் யாதொரு பிடித்தமும் செய்யக்கூடாது. மற்ற சிப்பந்திகள் விஷயத்திலும், முதலாளிக்கும் சிப்பந்திக்கும் எழுத்து மூலம் ஒப்பந்தம் ஏற்பட்டு அந்த ஒப்பந்தத்தில் சிப்பந்தி வேலையை விட்டுப்போக வேண்டுமானால் முதலாளிக்கு நோட்டீஸ் கொடுத்துத்தான் வேலையை விட்டு நீங்க வேண்டுமென்று கண்டிருக்க வேண்டும். அவ்விதம் ஒரு ஒப்பந்தம் இருந்து, அதன்படி சிப்பந்தி நோட்டீஸ் கொடுக்காமல் வேலையை விட்டு நின்று விட்டால்தான் அதனால் ஏற்படும் நஷ்டத்தை சிப்பந்தியின் சம்பளத்தில் பிடித்துக் கொள்ளலாம்.

கேள்வி: வேலையிலிருந்து நிற்பதற்கு எவ்வளவு காலத்திற்கு முன் சிப்பந்தி நோட்டீஸ் கொடுக்க வேண்டும்?

பதில்: முதலாளிக்கும் சிப்பந்திக்கும் ஏற்படும் ஒப்பந்தத்தில் எவ்வளவு நாள் முந்தி சிப்பந்தி நோட்டீஸ் கொடுக்க வேண்டுமென்று கண்டிக்கிறதோ அவ்விதம் நோட்டீஸ் கொடுக்கவேண்டும். அது 15 நாளுக்கு மேற்பட்டோ சம்பளம் வாங்கக் கூடிய காலத்திற்கு மேலாகவோ இருக்கக் கூடாது. ஆனால் முதலாளி சிப்பந்தியை வேலைக்கு வேண்டாமென்று சொல்ல ஒப்பந்தத்தில் ஏதாவது நோட்டீஸ் கெடு கண்டிருந்தால் அதே கெடுவுக்கு மேலாகாமல் நோட்டீஸ் கெடு இருக்கலாம். உதாரணமாக முதலாளி ஒரு மாத நோட்டீஸ் கொடுத்து சிப்பந்தியை நீக்கலாமென்றும், ஆனால் சிப்பந்தி தானாக விலகுவதாக இருந்தால் இரண்டு மாத நோட்டீஸ் கொடுக்கவேண்டுமென்றும் இருந்தால் அந்த ஒப்பந்தத்தில் கண்ட கெடு செல்லாது; சிப்பந்தி திடீரென்று வேலையை விட்டு நின்றாலும் அவருடைய சம்பளத்தில் யாதொரு பிடித்தமும் செய்யக்கூடாது. மேலும் இந்த விதியை ஆங்கிலத்திலும், சிப்பந்திகளின் பெரும்பான்மையோரின் தாய் பாஷையிலும் ஸ்தாபனத்தின் வாசலில் யாவருக்கும் தெரியும் விதம் விளம்பரப் படுத்தி இருக்க வேண்டும். மேலும் ஒரு சிப்பந்தி வேலைக்கு வராமல் நின்றுவிட்டால் அவருடைய பெயர், அவர் சம்பளத்தில் எவ்வளவு தினங்களின் சம்பளம் பிடிக்கப்படும் என்றும், (முதலாளி இஷ்டப்பட்டால்) சிப்பந்தி என்ன செய்தால் சம்பளம் பிடித்தம் வஜா செய்யப்படும் என்ற விஷயங்களும் பிரசுரம் செய்யப் பட்டிருக்க வேண்டும். வஜா செய்வதற்கான நிபந்தனைகளை பூர்த்தி செய்தாலும் பிடித்தம் கூடாது. நோட்டீஸ் கொடுத்தும், ஒப்பந்தத்தில் கண்ட நாட்களுக்குக் குறைவாக நோட்டீஸ் கெடு இருந்தால் எவ்வளவு நாள் குறைவாக இருக்கிறதோ அவ்வளவு நாள் சம்பளம் தான் பிடிக்கலாம். (ரூல் 12)

சிப்பந்தியை வேலையிலிருந்து நீக்கலாமா?

கேள்வி: முதலாளி தன்னிடம் வேலை பார்க்கும் சிப்பந்தியை இஷ்டப்படி நீக்கலாமா?

பதில்: ஒரு சிப்பந்தி வேலை பார்க்க ஆரம்பித்து ஆறுமாதம் ஆகாவிட்டால்தான் அவரை முதலாளி இஷ்டப்படி வேலையிலிருந்து நீக்கலாம். தொடர்ச்சியாய் ஆறு மாதத்திற்குக் குறையாமல் வேலைபார்த்த ஒரு சிப்பந்தியை வேலையைவிட்டு நீக்க ஒப்பத்தக்க தகுந்த காரணம் இருக்க வேண்டும்; மேலும் அப்படித் தகுந்த காரணமிருந்தாலும் அச்சிப்பந்தியை வேலையைவிட்டு நீக்கப்போவதாக முன்கூட்டியே ஒரு மாதத்திற்கு முன் அவருக்கு நோட்டீஸ் கொடுக்க வேண்டும். அல்லது நோட்டீசுக்குப் பதிலாக ஒரு மாதச் சம்பளமாவது சிப்பந்திக்கு கொடுக்கவேண்டும். ஆனால், சிப்பந்தியின் தவறான நடத்தை காரணமாக அவர் நீக்கப்பட்டால் இந்த ஒரு மாத நோட்டீசாவது, ஒரு மாதச் சம்பளமாவது கொடுக்க வேண்டியதில்லை. தவறான நடத்தைக்காக தள்ளுமுன் முதலாளி இதற்காக ஒரு விசாரணை நடத்தி திருப்திகரமான ருசுவின்பேரில்தான் அப்படிச் செய்யலாம். [41 (1)]

(தொடர்ச்சி 20-ம் பக்கம் பார்க்கவும்.)

விற்பனை வரி

(சென்ற இதழ் தொடர்ச்சி)

S. சாம்பசிவய்யர் B. A., B. L.,

["வக்கீல்" மே மாத இதழில் விற்பனை வரி என்பது வியாபாரிகள் மொத்த விற்பனையின் பேரில் சர்க்காருக்குக் கொடுக்க வேண்டிய வரி என்றும், ஒரு வருடத்தில் ரூ. 10,000க்குள் மொத்த வியாபாரம் செய்திருப்பவர்கள் விற்பனை வரி கொடுக்க வேண்டியதில்லை என்றும், ஆனால் ஒரு வருடத்தில் ரூ. 7500க்கு குறையாமல் மொத்த வியாபாரம் செய்யும் ஒவ்வொரு வியாபாரியும் கட்டாயமாக ஏ. ஸி. டி. ஓ. விடம் மனுச்செய்து தங்களை ரிஜிஸ்டர் செய்துகொள்ள வேண்டுமென்றும், சில வியாபாரிகள் குறிப்பிட்ட சாமான்களை விற்க அதற்குள்ள கட்டணம் கட்டி, லைசென்சு வாங்க வேண்டுமென்றும் சொல்லப்பட்டது.

"வக்கீல்" ஜூன் மாத இதழில் வியாபாரிகள் தாங்களாகவே ரிடர்ன் அனுப்ப வேண்டுமென்றும், ரூ. 20,000-க்கு மொத்த வியாபாரமுள்ளவர்கள் இஷ்டப்பட்டால் வேறு முறையில் வரி செலுத்தலா மென்றும், அப்பீல், ரிவிஷன் நடவடிக்கைகளைப் பற்றியும் எந்த சாமான்களுக்கு விற்பனைவரிச் சட்டமே அனுஷ்டிக்கப்பட மாட்டாதென்றும், அத்தியாவசிய மில்லாத சில சாமான்களுக்கு இன்னும் ஒரு தடவை வரி உண்டென்றும், எந்த சாமான்களை லைசென்சு பெற்ற வியாபாரிகள் விற்ருல் விற்பனை வரி கிடையாதென்றும் விபரமாய் சொல்லப்பட்டது.]

சில சாமான்களுக்கு எவரும் விற்பனை வரி செலுத்தவேண்டாம்: (1) தன் சொந்த நிலத்திலோ அல்லது தனக்கு ஒத்தி குத்தகை முதலிய பாத்தியமுள்ள நிலத்திலோ தேயிலையை பயிர் செய்பவர் இம் மாகாணத்திற்கு வெளியே உள்ள ஒருவருக்கு அதை விற்க சரக்கும் அனுப்பப்பட்டால் விற்பவர் யாதொரு விற்பனை வரியும் கொடுக்க வேண்டியதில்லை.

(2) உப்பு. [டர்ன் ஓவர் ரூல் 5. (1) J]

(3) சணல் நார் மாகாணத்திற்கு வெளியே உள்ளவருக்கு விற்கப்பட்டு சரக்கும் அனுப்பிவிட்டால் அதற்கு விற்பனை வரி கிடையாது. (17—12—47 சென்னை சர்க்கார் கெஜட்)

(4) சென்னை மாகாணத்திலுள்ள எல்லா பாங்குகளாலும் செய்யப்படும் எவ்வித விற்பனைக்கும் விற்பனைவரி கிடையாது. (18—5—1948 சென்னை சர்க்கார் கெஜட்)

(5) வெளி மாகாணத்து வியாபாரியின் பிரதிநிதி: இம் மாகாணத்திற்கு வெளியே உள்ள முதலாளியால் இம் மாகாணத்தில் அவருடைய வியாபாரத்தை கவனிப்பதற்காக நியமிக்கப்பட்டவர்கள் விற்பனைவரி கொடுக்கவேண்டியதில்லை. ஆனால் இவர்கள் முதலாளியின் ஏஜண்டுகளாகவோ, சரக்குகளையும் தஸ்தவேஜிகளையும் தன் இஷ்டப்படி விநியோகம் செய்ய அதிகாரமில்லாதவராகவும், தொகை வசூல் செய்ய அதிகாரமில்லாதவராகவும் இருக்கவேண்டும். (18—5—1948 சென்னை சர்க்கார் கெஜட்)

சில சாமான்களுக்கு லைசென்சு பெற்ற வியாபாரி முதல் தடவை வரி கொடுத்து விட்டால் மற்ற கட்டங்களில் லைசென்சு பெற்றவர் வரி கொடுக்க வேண்டியதில்லை. வரியும் சில சாமான்களுக்குக் குறைவு:— விற்பனை வரிச் சட்டத்தில் ஒரே சாமானை எத்தனை வியாபாரிகள் விற்ருலும் ஒவ்வொரு வியாபாரியும் அவர் செய்யும் விற்பனையின் பேரில் வரி கொடுக்க வேண்டுமென்று ஏற்கனவே சொல்லப்பட்டது. ஆனால் சில பொருள்களுக்கு மேற்கண்டபடி இரண்டு வகையில் சலுகை காட்டப்பட்டிருக்கிறது. அதாவது ஒரு லைசென்சு பெற்ற வியாபாரி வரி கொடுத்து விட்டால் அதே சாமான்களை பிந்தி விற்பனை செய்யும் லைசென்சு பெற்ற வியாபாரிகள் வரி கொடுக்கவேண்டியதில்லை.

(1) மில் நூலை இம் மாகாணத்தில் முதல் முதல் விற்பனை செய்யும் (இதற்காக லைசென்சு பெற்ற, வரி கொடுக்கவேண்டிய) வியாபாரி மட்டில் மில் நூலின் மொத்த வியாபாரத் தொகைக்கு ரூ 100-க்கு ரூ 0—8—0 (எட்டு அணு) வரி கொடுக்க

வேண்டும். அப்படி ஒரு கட்டத்தில் விற்பனே வரி வசூலான பிறகு அதே நூலே விற்கும் மற்ற லேசென்சு பெற்ற வியாபாரிகள் அதற்கு விற்பனே வரி கொடுக்க வேண்டியதில்லே. [5 ii டர்ன் ஓவர் ரூல் 4 Ai]

(2) தங்கம் வெள்ளி இவை இனமாகவோ நாணயமாகவோ இந்த மாகாணத்தில் முதல் முதல் விற்பனே செய்யும் (வரிஉள்ள லேசென்சு பெற்ற) வியாபாரி மட்டில் விற்பனேத் தொகையில் ரூ 100-க்கு அணு 4 வீதம் ஒரு தடவை வரி கொடுத்து விட்டால் அதே சாமானே பிந்தி விற்பனே செய்யும் (இதற்காக லேசென்சு பெற்ற) வியாபாரிகள் மறுபடியும் விற்பனே வரி கொடுக்க வேண்டியதில்லே. லேசென்சு இல்லாதவர்களுக்கு இந்தச் சலுகை கிடையாது. அவர்கள் மற்ற எல்லா சாமான்களுக்கும் போல் ரூபாய்க்கு காலணு வரி எந்தக் கட்டத்திலும் கொடுக்க கடமைப் பட்டவர்களே. [5 IV டர்ன் ஓவர் ரூல் Aii]

(3) சமாசாரப்பத்திரிகைகளே இம்மாகாணத்தில் முதல் முதல் விற்கும் (வரி உள்ள) வியாபாரிதான் விற்பனே வரி கொடுக்க வேண்டும். இதற்கு வரி குறைவு கிடையாது. மற்ற கட்டங்களில் சமாசாரப் பத்திரிகைகளின் விற்பனேக்கு வரி கிடையாது. [5 VI டர்ன் ஓவர் ரூல் 4 Aiii] சமாசாரப்பத்திரிகை விற்பவர்கள் லேசென்சு வாங்கிக் கொள்ள வேண்டுமென்று யாதொரு விதியும் இல்லே.

(4) பதனிட்டதோல்-பதனிடாததோல், இவைகளில் வியாபாரம் செய்ய லேசென்சு வாங்காத வியாபாரிகளுக்கு யாதொரு சலுகையும் கிடையாது. அவர்கள் மற்ற எல்லா வியாபாரிகளேப்போல் வருடத்தில் ரூ. 10,000-க்கு குறையாமல் மொத்த வியாபாரம் செய்தால் ரூபாய்க்குக் காலணு வீதம் விற்பனேவரி கொடுக்க வேண்டியவர்கள் தான்.

ஆனுல், லேசென்சு பெற்ற வியாபாரிகளுக்குச் சலுகை உண்டு. இம்மாகாணத்திற்கு வெளியில் தோல் பதனிடப்பட்டு பிறகு இம்மாகாணத்திற்கு தருவிக்கப்பட்டால், அதை முதன் முதல் விற்பனே செய்யும் வியாபாரிமட்டில் விற்பனேவரி (காலணு வீதம்) கொடுக்கவேண்டும். அதே சாமானே பிறகு விற்கும் லேசென்சு வியாபாரிகளுக்கு வரி கிடையாது. பதனிடாத தோல் சம்பந்தப்பட்ட வரையில் இதை வாங்கும் பதனிடும் வியாபாரி அவர் வாங்கும் மொத்தத் தொகைக்கு விற்பனேவரி கொடுக்க வேண்டும். பிறகு இதை விற்கும் அல்லது வாங்கும் யாதொரு வியபாரியும் (லேசென்சு பெற்றிருந்தால்) வரி கொடுக்க வேண்டியதில்லே. பதனிடாத தோல் இம்மாகாணத்திற்கு வெளியே அனுப்பப்பட்டால் கடைசியாக அவைகளே அனுப்புவதற்காக வாங்கும் வியாபாரி அவர் வாங்கும் மொத்தத் தொகைக்கு விற்பனேவரி கொடுக்க வேண்டும். [5 VI டர்ன் ஓவர் ரூல் 6]

கறிகாய் பழம்: இவைகளே வியாபாரம் செய்யும் வியாபாரியின் மொத்த வியாபாரம் ஒரு வருடத்தில் ரூ. 20,000-க்கு மேல் இருந்தால் அவருக்கு ஒரு சலுகையும் இல்லே. அவர் காலணு வீதம் சாதாரண விற்பனே வரி கொடுக்கவேண்டும். ஆனுல், ரூ. 10,000-க்கு மேல் ரூ. 15,000 வரை மொத்த வியாபாரம் உள்ளவர்கள் வருடத்தில் ரூ. 96-ம், ரூ. 15,000-க்கு மேல் ரூ. 20,000 வரை மொத்த வியாபாரமுள்ளவர்கள் வருடத்தில் ரூ. 144-ம் வரி கட்டினுல் போதும். (ஆனுல், இந்த சலுகையை அடைய கறிகாய் பழம் பக்குவம் செய்யப்பட்டு டின்னில் அடைக்கப்பட்டவைகளாக இருக்கக்கூடாது). (சென்னே சர்க்கார் கெஜட் 17—12—1947). இந்த வியாபாரத்திற்கு லேசென்சு வாங்க வேண்டியதில்லே.

கைத்தொழிலால் வேலேப்பாடு செய்யப்பட்ட சில சாமான்களே இம்மாகாணத்திற்கு வெளியே விற்ருல் பாதிவரி (ரிபேட்) வஜா செய்யப்படும்: இம்மாகாணத்தில் கைத்தொழிலால் முழு வேலேப்பாடும் செய்யப்பட்ட எந்த எந்த சாமான்களுக்கும், அவைகளே இம்மாகாணத்திற்கு வெளியே விற்று சாமானும் அனுப்பப்பட்டால் அவைகளின் விற்பனே வரியின் சரிபாதியை திருப்பிவாங்கலா மென்று சர்க்கார் நிர்ணயிப்பார்கள். அவ்விதம் இதுவரை

நிர்ணயித்த சாமான்களை அப்படி அனுப்பும் வியாபாரிகள் நமூனு 8 படி வஜாவுக்கு சாமான் அனுப்பிய 3 மாதங்களுக்குள் மனுப் போடவேண்டும். மனுவுக்கு ஸ்டாம்பு கிடையாது. யார் அந்த வியாபாரிக்கு வரி விதிக்கும் அதிகாரியோ அவருக்கு மனுப்போடவேண்டும். அவர் சரி பார்த்து (ரீபண்டு ஆர்டர்) அதாவது வரித் தொகையின் பாதியை திருப்பி பெற்றுக் கொள்ள ஆர்டர் கொடுப்பார்.

(ரிபேட்) வரியில் பாதியை திருப்பி வாங்கக்கூடிய சாமான்கள்: (1) விவசாயக் கருவிகள். (2) அலுமினிய சாமான்கள். (3) எலும்புத்தூள், குளம்புத்தூள் முதலியவை. (4) செங்கல் ஓடு. (5) ரசாயன பொருள்கள். (6) கம்பளம். (7) சிமிண்ட். (8) வறுத்த காப்பிக்கொட்டை பொடி. (9) கயிறு. (10) ஊறுகாய் தினுசுகள். (11) பெப்பர்மெண்ட், பிஸ்கட் வகையரு. (12) பருத்தி ஜவுளி. (13) எலெக்ட்ரோ பிளேட் சாமான்கள். (14) பீங்கான் சாமான்கள். (15) மர சாமான்களுக்குப் போடும் ப்ரெஞ்சுபாலிஷ். (16) மர சாமான்கள். (17) கிளாஸ் சாமான்கள். (18) பின்னல் பனியன், ஸ்டாகிங்ஸ் போன்றவை. (19) ஐஸ் (20) தொழிற்சாலை யந்திரம் வகையறு. (21) மை. (22) நகைகள். (23) சாக்கு சணல் வேலைப்பாடுகள். (24) சரிகை. (25) தோல் சாமான், செருப்பு, பூட்ஸ். (26) எரு. (27) நெருப்புப் பெட்டி. (28) மருந்து தயாரிப்புகள். (29) உலோக சாமான்கள். (30) புண்ணாக்கு, தாவர எண்ணெய். (31) பேப்பர், போட்டோ ஒட்டும் அட்டை முதலியவை. (32) பென்சில். (33) தலை ஜோடிப்பு (பித்). (34) ஜாடி முதலிய (குழாய்கள் நீங்கலாக) (35) அச்சு எழுத்துக்கள் முதலியவை. (36) கொயினா. (37) மூடிபோடும் பெல்ட். (38) நாடா. (39) சந்தன எண்ணெய். (40) பட்டு ஜவுளி. (41) வெள்ளி சாமான். (42) சோப்பு. (43) எஃகு சாமான்கள். (44) சர்க்கரை. (45) குடைகள். (46) கம்பளி சாமான். (47) தங்க ஜரிகை. (48) விளையாட்டு சாமான். (49) ஷர்பத்து. (50) சலவைக்கல். (51) வளை-பொத்தான். (52) நார்ப்பட்டு. (53) டப்பியில் அடைத்த பழவகை, மீன். (54) மீன். (55) பவுடர் முதலிய வாசனை சாமான்கள். (56) பாய், புருஷ் முதலியவை.

வியாபாரிகள் வைத்துக் கொள்ள வேண்டிய கணக்குகளும் ரிஜிஸ்டர்களும்:— ஒருவரிடத்தில் மொத்த வியாபாரம் ரூ 10,000-க்கும் அதற்கு மேலும் இருந்தால்தான் விற்பனை வரி கொடுக்க வேண்டுமென்றும் ஆனால் ரூ 7500-க்கு குறையாமல் ஒரு வருடத்தில மொத்த வியாபாரம் செய்யும் ஒவ்வொரு வியாபாரியும் கட்டாயமாக ரிஜிஸ்டர் (பதிவு) செய்துகொள்ளவேண்டுமென்றும் அதற்குக் குறைவாக வியாபாரம் செய்யும் வியாபாரியும் இஷ்டப்பட்டால் ரிஜிஸ்டர் செய்து கொள்ளலாமென்றும் ஏற்கனவே சொல்லப்பட்டது. ரிஜிஸ்டர் செய்து கொண்ட ஒவ்வொரு வியாபாரியும் சில சாமான்களில் வியாபாரம் செய்ய லைசென்சு பெற்ற ஒவ்வொரு வியாபாரியும் கட்டாயமாய்க் கணக்குகள் வைத்துக் கொள்ளவேண்டும். கணக்குகள் உண்மையாகவும் சரியாகவும் இருக்க வேண்டும். தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், ஹிந்துஸ்தானி அல்லது இங்கிலீஷ் இந்த பாஷைகளில் ஏதாவது ஒரு பாஷையில்தான் கணக்கு இருக்க வேண்டும். வியாபாரி வாங்கும் சரக்குகளையும் அவைகளின் விலையையும் கணக்குகள் காண்பிக்கவேண்டும். சாதாரண சாமான்களுக்கு கொடுக்கும் ரூபாய் 1-க்கு காலணு வரியைத் தவிர சில சாமான்களுக்கு, அதாவது மோட்டார் எலெக்டிரிக் சாமான்கள் போன்ற சில சாமான்களுக்கு மேற்கொண்டு அதிக வரி கொடுக்க வேண்டிய சாமான்களின் வாங்கும் விலைகளையும் விற்கும் விலைகளையும் தனித் தனியாக காண்பிக்குர்படி கணக்கு வைத்துக் கொள்ளவேண்டும். (அதிக வரி எந்தெந்த சாமான்களுக்கு கொடுக்க வேண்டுமென்று ஏற்கனவே சொல்லப் பட்டிருக்கிறது).

கணக்குகளையும், கொள் முதல் விற்பனை, கையிருப்பு முதலியவற்றை காண்பிக்கக்

கூடிய சீட்டுகளையும் (வவுசர்களையும்) அந்த வருடம் முடிந்ததும் பின் இரண்டு வருடங்களுக்கு பத்திரப்படுத்தி வைத்திருக்கவேண்டும். ஒவ்வொரு வகையான வவுசர்களுக்கும் தனித்தனியாய் தொடர்ந்த நம்பர் கொடுக்கப் பட்டிருக்க வேண்டும். ஏற்கனவே சொல்லப்பட்ட பிரகாரம் (1) வரியே இல்லாத சாமான்கள் (2) வரி குறைவான சாமான்கள் (3) வரி ஜாஸ்தியான சாமான்கள் இவைகளுக்குத் தனித் தனி கணக்குகள் வைத்துக் கொள்ள வேண்டும். தோல் பதனிடுவோர் மட்டில் இம்மாகணத்தில் பதனிட்ட தோலுக்குத் தனி கணக்கும், இம்மாகணத்திற்கு வெளியே அனுப்பும் பதனிட்ட தோலுக்கு தனிக் கணக்கும் வைத்துக் கொள்ளவேண்டும். குறிப்பிட்ட முதலாளிக்காக கமிஷன் ஏஜண்டாக வியாபாரம் செய்ய லைசென்சு பெற்றிருந்தால் அவர்களுக்கு விற்பனை வரி கிடையாதென்று ஏற்கனவே சொல்லப் பட்டது. அவ்விதம் லைசென்சை அனுசரித்து கமிஷன் ஏஜண்டாக வியாபாரம் செய்வதற்கு தனி கணக்குகளும் வைத்துக் கொள்ளவேண்டும். கமிஷன் ஏஜண்டாக வியாபாரம் செய்பவர்கள் நமூனா 10 படி வாங்கும் சாமான்களுக்கும் நமூனா 11 படி விற்கும் சாமான்களுக்கும் தனித்தனி கணக்குகள் வைத்துக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு வியாபாரியும் வரி வித்தியாசமுள்ள சாமான்களுக்கும் தனித் தனி கணக்கு வைத்துக் கொள்ளவேண்டும். உதாரணமாக மோட்டார் வண்டிகளுக்கு சாதாரண வரியை தவிர ரூ 1-க்கு அரையணா ஒரு கட்டத்தில் அதிக வரி உண்டு. அதேபோல் எலெக்ட்ரிக் சாமான்களுக்கு சாதாரண வரியைத் தவிர ஒரு கட்டத்தில் ரூ 1-க்கு காலணா அதிக வரி உண்டு. ஆகையால் மோட்டார் வியாபாரத்திற்குத் தனிக் கணக்கும் எலெக்ட்ரிக் சாமான்களுக்குத் தனிக் கணக்கும் (இரண்டிலும் வியாபாரம் செய்யும் வியாபாரிகள்) வைத்துக் கொள்ளவேண்டும்.

மொத்த வியாபாரத் தொகையை கணக்கு செய்வது எப்படி? பல இனங்களை கழித்துக் கொள்ளலாம்:— மேலும் மொத்த வியாபாரம் எவ்வளவு என்று கணக்கு செய்வதில் சட்டப்படி சில தொகைகளை குறைத்துக் கொண்டு பாக்கியேதான் மொத்த வியாபாரத் தொகையாகும். அதற்குத்தான் வரி. இவைகளை ஒரு வியாபாரியின் கணக்குகள் சரிவர காண்பித்தால்தான் இவைகளை மொத்த தொகையிலிருந்து குறைக்கப்படும். சட்டப்படி குறைத்துக் கொள்ளக்கூடிய இனங்கள் (1) 'டிஸ்கவுண்ட்' என்ற விலையில் தள்ளிக் கொடுப்பது (2) வாடிக்கைக்காரர் வாங்கிய சரக்கை திருப்பி வியாபாரியிடமே கொடுத்து விட்டால் அதன் கிரயம், கணக்கில் விற்ற தேதியும் திருப்பிக் கொடுத்த தேதியும் இருக்க வேண்டும். (3) ஒரு வியாபாரி தன்னிடம் சாமான் இல்லாதிருந்தும் வாடிக்கைக்காரரை திருப்தி செய்யும் பொருட்டு வேறு வியாபாரியிடம் சரக்கை எடுத்து வந்து விற்றிருந்தால், (சாமான் கொடுத்த வியாபாரியின் பெயரும் கணக்கில் இருந்து அதில் விற்பனை செய்த வியாபாரிக்கு யாதொரு லாபமும் இல்லாமலும் இருந்தால்) அப்படி அவர் செய்த விற்பனை தொகையை மொத்த வியாபாரத் தொகையிலிருந்தும் கழித்துக் கொள்ளப் படும். (4) விற்பனை வரி சட்டப்படி வரி இல்லாத சாமான்களின் விற்பனைத் தொகையை, இதற்காக தனி கணக்கு வைத்திருந்தால், மொத்த வியாபாரத் தொகையிலிருந்து கழித்துக் கொள்ளப் படும். (5) வண்டிச் சத்தம், பாக்கிங் சார்ஜ் முதலியவைகளையும் கழித்துக் கொள்ளலாம். ஆனால், வியாபாரி விற்பனை செய்யும்பொழுது இவைகளை சாமான் விலையுடன் சேர்க்காமல் தனியாக காண்பித்திருக்க வேண்டும். (6) ஒரு வியாபாரி தன் வியாபாரத்தையே மொத்தமாக விற்று விட்டால் அந்தத் தொகையை மொத்த வியாபாரத் தொகையிலிருந்து கழித்துக்

கும்பகோணம் ஸ்ரீ சக்கரபாணி சுவாமி தெற்கு வீதியிலுள்ள
கணபதி விலாஸ் காபி ஹோட்டல் (போர்டிங் & லாட்ஜிங்)
ருசிகரமான சாப்பாடும் சிற்றுண்டியும் கிடைக்கும். Prop: G. கணேசன்

கொள்ளலாம். (7) மத்திய சர்க்காருக்கு கொடுத்த சுங்கவரி. (8) உப்பு விற்பனை செய்திருந்தால் அதன் தொகை. (9) கடலை எண்ணை ஆட்டுபவர் அவர் வாங்கிய கடலையின் விலையை எண்ணை விற்பனைத் தொகையிலிருந்து கழித்துக்கொள்ளலாம்.

கணக்குகள் சரிவர இருக்கவேண்டிய தின் அவசியம்: விற்பனைவரிச் சட்டத்தில் ஒரு வியாபாரி வைத்துக்கொள்ள வேண்டிய கணக்குகளின் முறை பல இடங்களில் வற்புறுத்தப்படுகின்றது. அவ்விதம் கணக்குகள் இருந்தால்தான் வியாபாரிக்கும் லாபம். கணக்குகள் தனித்தனியாகவும், விபரமாகவும் இல்லாவிட்டால் மொத்த விற்பனைத் தொகையில் சட்டப்படி குறைக்கவேண்டிய பல இனங்களும் குறைக்கப்படமாட்டா. மேலும் அவ்விதம் வைத்துக்கொள்ளப்படாத கணக்குகளை வரிபோடும் அதிகாரி நம்பாவிட்டால், அவருக்கு யுக்தமாகத் தோன்றும் வரியை விதிக்க அவருக்கு அதிகாரமுண்டு. சட்டப்படி கணக்குகள் வைத்துக்கொள்ளாததும், பொய்க்கணக்கு கொடுப்பதும் குற்றங்களாகும்.

உடனே அதிகாரிகளுக்கு தேரிவிக்க வேண்டிய விஷயங்கள்: (1) ஒரு வியாபாரி அல்லது லைசென்சு பெற்றவர் வேறு ஒருவருடன் (கூட்டுச்) சேர்ந்து வியாபாரத்தை நடத்தினுல் அப்படி புதிதாய் கூட்டுச் சேர்ந்த 30 தினங்களுக்குள் அதை வரி விதிக்கும் அதிகாரிக்கு தெரிவிக்க வேண்டியது. கூட்டாளிகள் எல்லோரும் வரி கொடுக்க கடமைப்பட்டவர்கள்.

(2) அதேபோல் கூட்டு வியாபாரம் பிரிபட்டாலும் அதுமுதல் 30 தினங்களுக்குள் வரி விதிக்கும் அதிகாரிக்கு அதைத் தெரிவிக்க வேண்டும்.

(3) ஒரு வியாபாரி அல்லது லைசென்சு பெற்றவர் தன் வியாபாரத்தை நிறுத்தினுல் ஒரு மாதத்திற்குள் அதை வரி விதிக்கும் அதிகாரிக்குத் தெரியப்படுத்த வேண்டும். வியாபாரியோ, லைசென்சு பெற்றவரோ இறந்துபோய்விட்டாலும், வியாபாரம் நிறுத்தப்பட்டுப்போனுல் அவருடைய வார்சுகள் அவ்விதம் அதிகாரிக்குத் தெரியப்படுத்த கடமைப்பட்டவர்.

மேற்கண்ட விஷயங்களை அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தாமலிருப்பது குற்றமாகும்.

(தொடரும்)

(15-பக்கம் தொடர்ச்சி)

கேள்வி: ஒப்பத்தக்க அல்லது தகுந்த காரணங்கள் இருந்தால்தான் சிப்பந்தியை வேலையைவிட்டு நீக்கலாமென்றுல் 'ஒப்பத்தக்க' காரணங்கள் எவை?

பதில்: இது சட்டத்தில் என்ன என்று குறிப்பிட்டு சொல்லப்படவில்லை. அந்தந்த ஸ்தாபனத்தின் நிலைமைக்குத் தக்கவாறு தகுந்த காரணங்கள் இருக்கவேண்டுமென்று தான் சொல்லலாம்.

கேள்வி: சிப்பந்தியை வேலையைவிட்டு நீக்க (தகுந்த) ஒப்பத்தக்க காரணம் இருக்கின்றதா இல்லையா என்றும், சிப்பந்தியின் நடத்தை தவறு இல்லையா என்றும் யார் தீர்மானம் செய்வது?

பதில்: முதலாளிதான் இதை தீர்மானம் செய்ய வேண்டியவர். ஆனுல் வேலையிலிருந்து நீக்கப்பட்ட 30 தினங்களுக்குள் சிப்பந்தி (1) தன்னை வேலையை விட்டு நீக்க தகுந்த (ஒப்பத்தக்க) காரணம் இல்லை என்றும் அல்லது (2) தன் நடத்தை தவறு என்று முதலாளி தன்னை வேலையை விட்டு நீக்கியது சரியல்ல என்றும் லேபர் கமிஷனருக்கு அப்பீல் செய்யலாம். லேபர் கமிஷனர் சுருக்கமாக விசாரணை செய்து, சாக்ஷிகளை விசாரித்து முடிவு சொல்வார். அவர் செய்த முடிவை முதலாளிக்கும் சிப்பந்திக்கும் தெரிவிப்பார். அதற்கு காபி ஸ்டாம்புகள் கொடுத்து நகலும் வாங்கிக் கொள்ளலாம். லேபர் கமிஷனருடைய தீர்மானம் இருதிறப் பாரையும் கட்டுப்படுத்தக்கூடியது.

(தொடரும்)

கண்ட்ரோல்-லைசென்ஸ்-ரேஷன்-விலை நிர்ணயம்

இதர சர்க்கார் அறிக்கைகள்

வேர்க்கடலைப் புண்ணுக்கு

ஜில்லாவுக்கு ஜில்லா
கொண்டுசெல்வதுபற்றிய கட்டுப்பாடு

1949-ம் ஸு ஜனவரிமீ முதல் வேர்க்கடலைப் புண்ணுக்குக் கொள்முதல், விலைகள் பற்றிய கட்டுப்பாடுகள் எடுபட்டுவிட்டதினால், இது மாகாணம் பூராவிலும் எல்லா இடங்களிலும் வேண்டுவோருக்குக் கிடைக்கும்படி செய்வது முன்னையவிட அதிக அவசியமாய்விட்டது. இதற்காக ஜில்லாக்கள் கீழே கண்டபடி இரு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. தென்னிந்திய எண்ணெய் ஆலைச் சொந்தக்காரர்கள் சங்கத்தைக் கலந்து ஆலோசித்த பின்னரே இந்தப் பிரிவு செய்யப்பட்டது.

பகுதி (ஏ) (உபரி ஜில்லாக்கள்)	பகுதி (பி) (பற்றாக்குறை ஜில்லாக்கள்)
வடவிசாகப்பட்டணம்	கீழ்கோதாவரி
தென்விசாகப்பட்டணம்	மேல்கோதாவரி
குண்டூர்	நெல்லூர்
கிருஷ்ணா	வட ஆற்காடு
பெல்லாரி	திருச்சிராப்பள்ளி
அனந்தபூர்	தஞ்சாவூர்
கடப்பை	மதுரை
கர்நூல்	ராமநாதபுரம்
செங்கற்பட்டு - சென்னை	திருநெல்வேலி
தென் ஆற்காடு	கோயம்புத்தூர்
சேலம்	மலையாளம்
சித்தூர்	தென்கன்னடம்
	நீலகிரி

'ஏ' குரூப்பைச் சேர்ந்த ஜில்லாக்களிலிருந்து 'பி' பகுதி ஜில்லாக்களுக்குப் புண்ணாக்கு எடுத்துச் செல்லப்படலாம்; 'ஏ' 'பி' பகுதிகளிலுள்ள ஜில்லாக்கள் ஒன்றுக்கொன்றிலும் 'பி' பகுதியிலுள்ள ஜில்லாக்களிலிருந்து 'ஏ' பிரிவிலுள்ள ஜில்லாக்களுக்குமோர் புண்ணாக்கு எடுத்துச் செல்லப்படக்கூடாது. 'ஏ' பிரிவில் உள்ள ஆலைச் சொந்தக்காரர்கள் 'பி' பிரிவில் உள்ள ஜில்லாக்களுக்குப் புண்ணாக்கு அனுப்ப நிரந்தர பெர்மிட்களை ஜில்லா விவசாய அதிகாரிகளிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். இந்தக் கட்டுப்பாடுகள் மீறப்பட்டால் சென்னை எண்ணெய்ப் புண்ணாக்கு போக்குவரத்துக் கட்டுப்பாடு உத்தரவை மீறியதாகக் கருதப்படும்.

(15—6—49 சென்னைச் செய்தி)

உருக்கு விலை நிர்ணயம்

ஜூன் 1-ந்தேதி முதல் உருக்கு விலையில் டன்னுக்கு ரூ. 50 (சராசரி) உயர்த்த இந்திய சர்க்கார் தீர்மானித்திருக்கிறது.

பார்கள் ராடுகளுக்கு டன்னுக்கு ரூ. 33 வீதமும் கட்டிட உருக்குச் சாமான்களுக்கு ரூ. 35 வீதமும், பிளேட்டுகள், பிளாக் ஷீட்டுகளுக்கு ரூ. 67 வீதமும், கால்வனைஸ்டு காருகேட்டட் ஷீட்டுகளுக்கு ரூ. 8 வீதமும் விலை உயர்த்தப்படும். இத் தகவலை இந்திய வர்த்தக இலாகா அறிவிக்கிறது.

ஜவுளி நூல்

நூல் கையிருப்பு

இதர ஜில்லாக்களுக்கு அனுப்ப அனுமதி வேண்டாம்: மாகாண ஜவுளிக் கமிஷனர் காரியாலய அறிக்கை ஒன்று கூறுவதாவது:—

கூட்டுறவுச் சங்கங்களிடமும், லைசென்ஸ்தார்களிடமும் தேங்கிக் கிடக்கும் நூல் ஸ்டாக்குகளைப் பைசல் செய்வதற்காக, 1949, ஏப்ரல் 1-ந்தேதிக்கு முன் கட்டுக் கட்டப்பட்ட எல்லா ரக நூல்களையும், 1949 ஜூலை 31உ வரை மாகாணத்திற்குள் ஒரு ஜில்லாவிலிருந்து மற்றொரு ஜில்லாவுக்கு அனுமதி இல்லாமல் அனுப்பலா

மென்று சர்க்கார் அனுமதித்திருக்கின்றனர். மின்சாரத் தறிகள், பின்னல் தொழிற் சாலைகள், முதலியவற்றைத் தவிர இதர நெசவாளர்களுக்கும், மற்றபடி நூல் உபயோகிப்பவர்களுக்கும் சப்ளை செய்யும் நூலுக்கு அளவு கட்டுப்பாடு கிடையாது. மின்சாரத் தறிகள், பின்னல் தொழிற் சாலைகள் முதலியவை, தங்களுக்கு அனுமதிக்கப் பட்டிருப்பதைப்போல் இரு மடங்கு நூல் வாங்கிக் கொள்ள அனுமதிக் கப்படும். இது பற்றிய மேல் விவரங் களுக்கு ஜில்லா கலெக்டர்களிடம் கேட்கவும்.

விசைத்தறி ஜவுளிக்கு தடை நீக்கம்

விசைத்தறி ஜவுளிகளை இந்திய யூனி யனில் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு அனுப்புவதற்கு இதுவரை விதிக்கப்பட்டி ருந்த தடை நீக்கப்பட்டிருக்கிறது. இந்திய சர்க்கார் கைத்தொழில் சப்ளை இலாகா மேற்கண்டவாறு அறிக்கையொன்றை வெளி யிட்டிருக்கிறது.

கைத்தறி ஜவுளி என்பது நூல் நூற்கும் இயந்திரங்கள் அமைக்கப்படாத மில் களிலும் நெசவு தொழிற்சாலைகளிலும் உற்பத்தியாகும் ஜவுளியேயாகும். இந்த ஜவுளிகளை ரயில் மார்க்கமாகவோ, கடல் மார்க்கமாகவோ 'பெர்மிட்'கள் இல்லாமல் இந்திய யூனியன் பிரதேசங்களுக்கு ஓரி டத்திலிருந்து மற்றோரிடத்திற்கு அனுப்பலாம்.

மில் துணி "ரிசர்வ்" செய்தல்
எழுத்து மூலம் ஆதாரம் தேவை

சென்னை சர்க்கார் உத்திரவு:— சில்லரை வியாபாரி ஒருவர் மில் துணி விற்பனைக்கு கொடுக்க மறுத்ததாக சர்க்காரிடம் புகார் செய்யப்பட்டிருக்கிறது. சில குறிப்பிட்ட நபர்களுக்காக இத்துணி ரிசர்வ் செய்து வைக்கப் பட்டிருப்பதாக இவ்வியாபாரி கூறினாராம்.

சர்க்கார் இவ்விஷயத்தை விசாரித்து துணி தேவையாக இருப்போரிடமிருந்து எழுத்து மூலம் தங்களுக்கு துணி தேவை என கடிதங்கள் அனுப்பப்பட்டிருக்க வேண்டும் என்றும் கடைக்காரர்கள் இக் கடிதங்களை காட்டாவிடில் துணி ரிசர்வ் செய்வது செல்லாது என்றும் சர்க்கார் உத்திரவிட்டிருக்கிறது.

ஏற்றுமதி

பருத்தித் துணி ஏற்றுமதி வரி
ஜூன் 1-லிருந்து ரத்து

இந்திய ஏற்றுமதி வியாபார நலனை உத் தேசித்து ஜூன் 1-ந்தேதியிலிருந்து பருத்தித்துணியின்மேல் விதிக்கப்பட்டுவந்த ஏற்றுமதி வரியை இந்திய சர்க்கார் ரத்துச் செய்துள்ளனர்.

இதை அறிவிக்கும் நிதிமந்திரியாலயப் பத்திரிகைக் குறிப்பு கூறுவதாவது:— பருத்தித் துணிகளின் விலையில் 25 சதவிகி தத்தை ஏற்றுமதி வரியாக விதிக்கப்பட் டதை 10 சத விகிதத்திற்குக் குறைப்பது என இந்திய சர்க்கார் முடிவுசெய்து 1948 நவம்பர் 9-ந்தேதி அறிவித்தனர். அது முதற்கொண்டு இவ்வரி இந்திய ஏற்றுமதி வியாபாரத்தை இன்னும் பாதிக்கிறது என மகஜர் மேல் மகஜர் வந்துகொண்டிருந்தது. பிரச்னையை நன்கு ஆலோசித்தபின் பருத்தி துணிகளின் மேலுள்ள ஏற்றுமதி வரியை பூராவாக எடுத்துவிட வேண்டுமென சர்க் கார் முடிவு செய்தனர்.

வெளிநாடுகளுக்கு கைத்தறி
ஜவுளிகள் ஏற்றுமதி
தவணை டிசம்பர் முடிய நீடிக்கிறது
இந்திய சர்க்கார் அறிவிப்பு

ரெடிமேடு உடைகளும் அனுப்பலாம்: பாகிஸ்தான் உள்பட வெளிநாடுகளுக்கு லைசென்ஸ் இல்லாமல் கைத்தறி ஜவுளி ஏற்று மதி செய்ய அனுமதிக்கப்பட்டிருந்த கால வரம்பு 1949 டிசம்பர்வரை நீடிக்கப்பட் டுள்ளதாக 30-5-49 தேதி சர்க்கார் அறி விப்பு ஒன்று கூறியது.

விசைத்தறி ஜவுளி ரெடிமேடு உடைகள் இவை ஏற்றுமதியும் தாராளமாக அனு மதிக்கப்படும்.

கைத்தறி திப்பட்டிகள் (பிளாங்கெட்), பைகள், நூல் கயிறுகள், கூடாரத்துணி, டேப், விளக்குத்திரி, நூல்லேஸ் திரிகள் முதலியன ஏற்றுமதி செய்யப்படலாம். இவை சர்பந்தமான ஏற்றுமதிக் கட்டுப்பாடுகள் ரத்து செய்யப்பட்டுள்ளன.

பிரத்தியேக ஜவுளி வகைகளின் ஏற்றுமதி விசேஷ அனுமதி அவசியம்

பொது அனுமதியின் மூலம் விதிவிலக்கு அளிக்கப்பட்டிருந்தால் அன்றி, கீழ்க்கண்ட துணி நூல்வகை வெளியே கொண்டுசெல்ல ஜவுளி கமிஷனரிடமிருந்து பிரத்தியேக அனுமதிச் சீட்டு பெறுவது அவசியமென்று பொது மக்களுக்கு அறிவிக்கப் படுவதாக ஜவுளிக் கமிஷனர் காரியாலய அறிக்கை ஒன்று கூறுகிறது.

ஜமக்காளம் அல்லது ஜமக்காளத்தினுல் தைக்கப்பட்ட பொருள்கள், குடைத் துணி, தையல் நூல், பூவேலை செய்யும் நூல், பூவேலை செய்யப்பட்ட துணிவகைகள், வடிக்கட்டும் துணி, கைக்குட்டைகள், பருத்திநூலால் நெய்யப்பட்ட போர்வைகள், கொசுவலை முதலியவற்றை ஜவுளி கமிஷனரின் பிரத்தியேக அனுமதியின்றி மாகாணத்திலிருந்து வெளியேகொண்டு செல்லக்கூடாதென்று அவ்வறிக்கை கூறுகிறது.

10 பவுண்டுக்கு மேற்படாத சொந்த துணி வகைகளைத்தான் பிரயாணிகள் எடுத்துச் செல்லலாமென்று தற்சமயம் பொதுவான அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது.

பெயிண்ட், வார்னிஷ் ஏற்றுமதி

கோட்டாமுறை நீங்கும்: ஈயம், அல்லது துத்தநாகம் சேர்ந்த வார்னிஷ், பெயிண்ட், என்மல் இவை இதுவரை 'கோட்டாப்' பிரகாரம் ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தன. இனிமேல் 1-6-49-ந்தேதி முதல் 3 மாதங்களுக்கு தாராளமாக அனுமதிக்கப்பட்ட இடங்களுக்கு ஏற்றுமதி செய்ய இலவச லைசென்சுகள் வழங்கப்படும் என்று வர்த்தக இலாகா அறிக்கையொன்று கூறுகிறது.

எலும்புத் துண்டுகள் ஏற்றுமதி

கட்டுப்பாட்டை சர்க்கார் நீக்குகிறது: எலும்புத் துண்டுகளையும், எலும்பு துணுக்குகளையும் (கிரஷ்டு; கிர்ஸ்டு) அனுமதிக்கப்பட்டுள்ள இடங்களுக்கு ஏற்றுமதி செய்ய லைசென்சுகள் தாராளமாக வழங்கப்படும் என்று இந்திய சர்க்கார் அறிவிக்கிறது. இப்போது உள்ளதுபோல் சர்க்காருக்கு எலும்புத்தூளை (போன்மீல்) விற்பதுடன் ஏற்றுமதி விஷயம் இனி இணைக்கப்பட மாட்டாது. துறைமுகங்களில் உள்ள ஏற்றுமதி அதிகாரிகளிடம் லைசென்சு வாங்கிக்கொள்ளலாம்.

சர்க்காருக்கு ஒரு டன் எலும்புத்தூளை விற்றால்தான் 3 டன் எலும்புத்துணுக்குகளை ஏற்றுமதி செய்யலாம் என்பது இதுவரை இருந்துவரும் ஏற்பாடு.

எலும்புத்தூள் (போன்மீல்) ஏற்றுமதி பற்றிய கட்டுப்பாடுகள் நீடித்து இருந்து வரும்.

கருப்பு மிளகு ஏற்றுமதி லைசென்ஸ்

ஹாலந்து, பிரான்ஸ், இத்தாலி, ஆகிய தேசங்களைத் தவிர இதர எல்லா ஸ்டார்லிங் போன்ற சுலப நாணய பிரதேசங்களுக்கு கருப்பு மிளகை ஏற்றுமதி செய்ய தாராளமாக "லைசென்ஸ்" கொடுக்கப்படுமென்று இந்திய சர்க்காரின் வர்த்தக இலாக்கா கூறுகிறது. இந்த உத்தரவு ஜூன் 1-தேதியிலிருந்து இன்னும் மூன்று மாதங்களுக்குப் பொருந்தும்.

வர்த்தக இலாக்கா அறிக்கை மேலும் கூறுவதாவது:- ஹாலந்துக்கு மிளகு ஏற்றுமதி அனுமதிக்கப்பட மாட்டாது. பிரான்ஸ், இத்தாலி ஆகிய இருதேசங்களுக்கும் கோட்டாப்படி அனுப்பப்படும்.

பாகிஸ்தானுக்கு லைசென்ஸ் இல்லாமல் அனுப்பலாம்.

டாலர் போன்ற கடின நாணயப் பிரதேசங்களுக்கு முன்போலவே பொது லைசென்ஸ் திட்டத்தின் கீழ் ஏற்றுமதி அனுமதிக்கப்படும்.

இறக்குமதி

ஓ. ஜி. எல். விசேஷ லைசென்ஸ் பெறுதல்

இந்திய சர்க்கார் புது விளக்கங்கள்: 1949 ஜூன் முதல் தேதியன்று வெளியான பொது அறிவிப்பில் வெளியிடப்பட்டுள்ள திட்டத்தை அனுசரித்து விசேஷ (ஓ. ஜி. எல். 11) லைசென்ஸ்கள் வழங்குவது சம்பந்தமாக இந்திய சர்க்கார் சில விஷயங்களைத் தெளிவு படுத்தியுள்ளனர்.

7—6—49 தேதி விசேஷ கெஜட்டில் வெளியாகியுள்ள ஒரு பொது அறிவிப்பு கூறுவதாவது:—

1949 மே 4-ந் தேதிக்கு முன்னரே ரத்து செய்ய முடியாத "லெட்டர் ஆப் கிரடிட்" திறந்துள்ள எல்லாச் சரக்குகளுக்கும் அவை 1949 மேமீ 31-ந் தேதிக்குப்பின் தான் கப்பலேற்றப்படும் என்றிருந்தால் விசேஷ லைசென்ஸ்கள் வழங்கப்படும். ஆனால் விசேஷ லைசென்ஸ்கள் பெறுவதற்கு லைசென்ஸ் கொடுக்கும் அதிகாரிகள் திருப்தியுறும் வகையில், பாங்க் பத்திரம் முதலிய ருசுக்களை வியாபாரிகள் தாக்கல் செய்ய வேண்டும்.

மத்திய, சர்க்கார்கள் கொடுத்துள்ள திட்டமான "ஆர்டர்களை ஆதாரமாகக் கொண்டு 1949 மே, 4-ந் தேதி அல்லது அல்லது அதற்கு முன்பே வெளி நாட்டு வியாபாரிகளுடன் ஒப்பந்தம் (கண்டிராக்ட்) செய்துள்ளவர்கள் விஷயத்தில் சலுகை காட்டப்படும். ஆனால் இதற்குப் போதுமான தஸ்தவேஜுகளை பூர்வமான ஆதாரத்துடன் காட்டவேண்டும்.

"லெட்டர் ஆப் கிரடிட்" திறக்காமல் விசேஷ லைசென்ஸ் கோரியுள்ள மனுதார்கள் ஒரு பாங்கு-பத்திரம் தாக்கல் செய்ய வேண்டும். பிரஸ்தாப மனுதார்கள் வெளி நாடுகளிலுள்ள தங்கள் வாடிக்கைக்காரர்களுக்கு வழக்கமாக எவ்விதம் பணம் செலுத்தி வந்தனர் என்பதை ருசுப்பிப்பதாக மேற்படி பாங்கு பத்திரம் இருக்க வேண்டும்.

1949 ஜூன் முதல் தேதியன்று வெளியான "ஏ" "பி" அனுபந்தங்களுக்கு சில சிறு திருத்தங்களும் விசேஷ கெஜட் அறிவிப்பில் காணப்படுகின்றன.

சர்க்கார் அறிக்கை

ஆசவம், அரிஷ்டங்கள் தயாரித்தல்

குறை ஏற்பட வழியில்லை என்று சர்க்கார் விளக்கம்: சென்னை, ஜூன், 4 சென்னை சர்க்கார் அறிக்கையொன்று கூறுவதாவது: ஆசவம், அரிஷ்டங்கள் செய்வதற்கு மதுவிலக்குச் சட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்டிருக்கும் விதிகளினால் ஆயுர்வேத வைத்தியர்களுக்கும், பொதுஜனங்களுக்கும் அசௌகரியம் ஏற்பட்டிருப்பதாகச் சில குறைகள் தெரிவிக்கப்பட்டன. இதுபற்றி பின்வரும் விளக்கம் தரப்படுகிறது.

இப்பொழுதுள்ள விதிகளின் கீழ் லைசென்ஸ் பெற்றவர்கள் மதுவிலக்கு அமுலிலுள்ள இடங்களில் ஆசவங்கள், அரிஷ்டங்கள் தயாரித்து விற்பனை செய்யலாம். இந்த லைசென்ஸ்கள் மூன்று வகைப்படும். (1) ஆயுர்வேத வைத்தியர்கள் லைசென்ஸ் ஒரு ரூபாய் வருஷக் கட்டணம் செலுத்தி கலெக்டர்களிடமிருந்து பெறலாம். (2) ஆயுர்வேத வைத்தியசாலைகளுக்கான லைசென்ஸ் கலெக்டரிடம் வருஷத்திற்கு ரூ. 10 செலுத்தி இதைப் பெறலாம். ஆயுர்வேத வைத்திய லைசென்ஸ் அல்லது மருத்துவர்சாலை லைசென்ஸ் பெற்றவர்களுக்கும், சீல்வைக்கப்பட்ட புட்டிகளில் கால் காலனுக்கு அதிகப்படாமல் ஆயுர்வேத வைத்தியரிடமிருந்து மருந்துச்சீட்டு பெற்றவர்களுக்குமட்டும் கொடுக்கலாம். மாகாணத்திற்கு வெளியிலும் அனுப்பலாம். (3) மருந்துச்சாலை (கெமிஸ்டுகள்) வைத்திருப்பவர்கள் கலெக்டரிடம் வருட கட்டணம் ரூ. 25 செலுத்தி இந்த லைசென்ஸைப் பெறலாம். பிராந்தியும், இதர மதுவகைகளையும் விற்பனை செய்ய லைசென்ஸ் பெற்ற கெமிஸ்டுகள் மேற்சண்ட லைசென்ஸ் பெறலாம்.

இந்த விதிகளிலிருந்து ஆயுர்வேத வைத்தியம் செய்ய லைசென்ஸ் பெற்றவர்கள் திராக்ஷாரிஷ்டம், திராக்ஷாஸ்வம் முதலியவற்றைச் செய்யலாம். தேர்ச்சி பெற்ற வைத்தியர்களின் மருந்து சீட்டுகளின் பேரில்மட்டும் தங்களிடம் சிகிச்சைபெறுகிறவர்களுக்குக் கொடுக்கலாம். அவர்கள் இதர மாகாணங்களுக்கும் ஆசவங்களையும், அரிஷ்டங்களையும் ஏற்றுமதி செய்யலாம். இதனால் பொதுஜனங்களுக்கும், ஆயுர்வேத வைத்தியர்களுக்கும் கஷ்டம் எற்படவில்லையென்று சர்க்கார் கருதுகிறார்கள்.

“வனஸ்பதி” என்ற பெயர் கூடாது

இந்திய சர்க்கார் புதிய உத்திரவு: தாவர எண்ணை பொருட்கள் (வனஸ்பதி) தயார் செய்யும் எல்லாத் தொழிற்சாலைகளும் ஆகஸ்டு முதல் தேதியிலிருந்து மேற்படி பொருட்களை அடைத்துள்ள டின்கள் (அல்லது பாத்திரங்கள்) மீது “வனஸ்பதி” என்றோ “தாவரப் பொருட்கள்” என்றோ எழுதக்கூடாதென இந்திய சர்க்கார் உத்தரவு பிரப்பித்துள்ளனர்.

தாவர எண்ணைப் பொருள்களை அடைத்துள்ள பாத்திரங்கள்மீது அதை தயாரிப்பவர் பெயர் இருக்கவேண்டும். தவிர, “ஜலவாயு கலந்த கடலை எண்ணை பருத்தி எண்ணை அல்லது ஜலவாயு கலந்த கடலை தேங்காய் எண்ணை” என்று அந்தந்த தயாரிப்பில் சேர்க்கப்பட்டுள்ள எண்ணைகளின் பெயர்கள் டின்கள் மேல் ஆங்கிலத்திலும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட இந்திய பாஷைகளிலும் எழுதப்பட வேண்டும்.

தாவர எண்ணைப் பொருட்கள் தயாரிப்புகளில் என்னென்ன கலக்கப்பட்டுள்ளன என்பது சம்பந்தமாக ஏற்படும் சந்தேகங்களைப் போக்கவே இப்புதிய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக இந்திய சர்க்கார் விவசாய இலாகா அறிக்கை ஒன்று கூறுகிறது.

கலியாண
காலத்திற்கேற்ற
பட்டுச் சேலைகள்

துண்டுப் பாவாடைகள், ரவிக்கைத் துண்டுகள், உங்களுக்குப் பிடித்த பல தினுசுகளிலும் கலர்களிலும் ஸ்டாக் செய்துள்ளோம்.

ருக்மணி ஸில்க் - - எம்போரியம்

பெரிய தெரு, :: கும்பகோணம்.

ஸ்ரீ ராமானுஜா பப்ளிஷிங் ஹவுஸ்

ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம பாஷ்யம் (பட்டர் பாஷ்யமும் ஸ்ரீ சங்கர பாஷ்யமும் கூடியது)

முழு காலிகோ ... ரூ. 3-12-0
அரை காலிகோ ... 3-6-0
ஷை மூலம், தமிழ், கிரந்தம், நாகரம் தனித் தனி ... ரூ. 0-5-0
திருவாய் மொழி 3 வால்யுங்களாகப் பைண்ட் செய்தது ... ரூ. 9-0-0
ஷை பைண்ட் செய்யாதது 6-0-0

கிடைக்குமிடம்:
M. R. ராஜகோபாலன்
48, கலியாணராமன் தெரு,
கும்பகோணம்.

ஆனந்தா சோப்புகளை உபயோகியுங்கள்

சலவைக்குச் சிறந்தது! ஆடைகளை கெடுக்காது வெண்மை தரும்!!

உரிமையாளர்: K. கணபதி. சாக்கோட்டை P. O. கும்பகோணம்.

கேள்வியும்-பதிலும்

இப்பகுதியில் நமது வாசகர்கள் கேட்கும் சட்ட சம்பந்தமான கேள்விகளுக்குமட்டில் பத்திரிகையில் இடமிருக்கும் வரை பதில் அளிக்கப்படும். கேள்வி கேட்பவர்கள் தங்கள் சொந்த விவகாரங்களைப்பற்றி எழுதக்கூடாது, சட்டங்களிலோ, விதிகளிலோ ஏற்படக் கூடிய சந்தேகங்களைத் தெளிவுபடுத்திக்கொள்ளும் முறையில்தான் கேள்விகள் இருக்க வேண்டும். கேள்விகள் சுருக்கமாய் இருக்கவேண்டும்; கேள்விகளுக்குச் சொல்லப்படும் பதில் அபிப்பிராயமே.

கேள்வி: தங்கம், வெள்ளி சாமான்களின் பேரில் அடகு பிடித்து கடன் கொடுப்பவர்கள் ஏதாவது லைசென்சு வாங்கிக்கொள்ள வேண்டுமா?

பதில்: சென்னை 1943-ம் வருடத்திய 23-வது ஆக்ட் (பான் புரோகர்ஸ் ஆக்ட்) என்ற அடகு அல்லது ஈட்டின்பேரில் கடன் கொடுப்பவர்களைக் குறித்த சட்டப்படி எந்த சாமான்களின் ஈட்டின்பேரிலும் கடன்கொடுத்து இத்தொழில் நடத்துபவர்கள் இதற்காக லைசென்சு வாங்கிக்கொண்டுதான் தொழில் நடத்தலாம். பல இடங்களில் கடைகள் உடையவர்கள் ஒவ்வொன்றுக்கும் தனித்தனி லைசென்சு வாங்கிக்கொள்ளவேண்டும். சென்னையில் இத்தொழில் நடத்துபவர்கள் சென்னை கலெக்டருக்கும், மற்ற இடங்களில் தொழில் நடத்துபவர்கள் அந்தந்த ஊர் ரிவன்யூ டிவிஷனல் ஆபீசருக்கும் லைசென்சு பெற மனுப்போட வேண்டும்.

கேள்வி: ஷாப்சட்டப்படி 1-7-1949-க்கு பிறகு ஒரு கடையில் முதலாளியே நேரில் காலை 6-மணிக்கு முன்போ, இரவு 10-மணிக்குப் பின்போ வியாபாரம் செய்யலாமா?

பதில்: கூடாது. ஆனால், கடை மூட வேண்டிய நேரத்தில் ஒரு வாடிக்கைக்காரர் பேரம் பேசிக்கொண்டோ, காத்துக் கொண்டோ இருந்தால் அவருக்குமட்டில் அடுத்த கால்மணி நேரத்திற்குள் வியாபாரம் செய்யலாம்.

கேள்வி: ஷாப் சட்டப்படி ஒரு சிப்பந்தி ஒரு தினத்தில் வேலைசெய்ய நேரம் 8 மணி என்று நிர்ணயிக்கப்பட்ட கால அளவுக்குக் குறைவாக வேலைசெய்தால் அதற்கு, சம்பளம் குறைக்கலாமா?

பதில்: ஷாப் சட்டத்தில் ஒவ்வொரு சிப்பந்தியும் தினம் 8-மணி நேரம் கட்டாயமாய் வேலைசெய்ய வேண்டுமென்று யாதொன்றும் இல்லை. அந்தந்த முதலாளிகள் தங்கள் தங்கள் சிப்பந்திகள் தினம் எவ்வளவு நேரம் வேலைசெய்ய வேண்டுமென்றும், அதற்குச் சம்பளம் எவ்வளவு என்றும் பேசிக்கொள்ளலாம். ஆனல், அந்த வேலை நேரம் 17-வயது பூர்த்தி ஆகாதவருக்கு தினம் 7-மணி நேரத்திற்கு மேலும் 17-வயது பூர்த்தி ஆன சிப்பந்திக்கு தினம் 8-மணி நேரத்திற்கு மேலும் இருக்கக் கூடாது. குறைவாக இருக்கலாம். அந்தந்த சிப்பந்தி ஒப்பந்தப்படி செய்ய வேண்டிய வேலை நேரத்திற்கு வேலை செய்ய (தகுந்தகாரணமின்றி) மறுத்தால் அப்படி வேலைசெய்யாத நேரத்திற்குள்ள விதாசாரமான சம்பளத்தை பிடித்தம் செய்யலாம். (ஷாப் சட்டம் செக்ஷன் 36-விவரணம்)

187687

ரேடியோக்களை
சௌகரியமான ...
பழுது பார்க்க

சுதர்சன் ரேடியோ ஹவுஸ்
சக்கரபாணி கீழவீதி :: கும்பகோணம்.

Printed by DR. V. R. MURTY at the Homoeopathy Press, Banadurai, Kumbakonam.
Edited and Published by M. R. RAJAGOPALAN at No. 48 Kalyanaraman Street, Kumbakonam,

கல்யாண ஸீஸனுக்கென்றே புதுப்புது டிஸைன்

பெங்களூர், காஞ்சீவரம், கும்பகோணம்

பட்டுச் சேலைகள்

ஏராளமாக ஸ்டாக் செய்திருக்கிறோம். தேவைக்கு உடனே முந்துங்கள்.

ரெங்கமூர்த்தி கம்பெனி

கெருடலாயத் தெரு, :: கும்பகோணம்.

பிராஞ்சுகள் :—மெ. மெ. வீதி, காரைக்குடி & நாட்டரசன்கோட்டை.

சாயத்திற்கு உத்திரவாதமுள்ள
அற்புத கலர்களில் கவர்ச்சி செய்யும் பார்டர்கள்
முந்திகள் அமைந்த எமது சொந்த கை நெசவு
ஜரிகை பட்டு & நூல் சேலைகள்

வேண்டியவற்றிற்கு ஆர்டர் கொடுங்கள்.

பிரிட்டிஷ் எம்பயர் எக்ஸிபிஷனில் மெடல் சர்டிபிகேட் பெற்ற

ராணி ரெங்கய்யர் ஸன்ஸ்

பட்டு ஜவுளி உற்பத்தியாளர்கள்

கெருடலாயத் தெரு — கும்பகோணம்

கிளை : 20, லெக்ஷிமிபுரம் 2-வது தெரு, மதுரை.

No. M. 5399

V. S. & Sons

SWEETS

குணத்திலும்

மணத்திலும்

நிகரற்றது

வி. எஸ். & ஸன்ஸ்

பெப்பர்மெண்டுகள்

தயாரிப்பவர்கள் :

தென் இந்திய பெப்பர்மெண்டு தொழிற்சாலை

கும்பகோணம்

(Estd. 1925)

ஹோமியோபதி பிரஸ், கும்பகோணம்.